# மரபுகளும் மாற்றங்களும்



கலாநிதி
என்-சண்முகலிங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபுகளும்
# மாற்றங்களும்

கலாநிதி என். சண்முகலிங்கன்
தலைவர், அரசறிவியல்-சமூகவியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நாகலிங்கம்
நூலாலயம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Marapukalum Maattrangalum**
(Traditions and Change)
By **Dr. N.Shanmugalingan**
©- **Mrs. Gowri Shanmugalingan**
First Edition:**20.07.2001,**Aadi Amaavaasai day
Cover design: **T.Sanathanan..**
Screen Print: **Guru Arts**, Thirunelvely
Published by : **Nagalingam Noolalayam**
Nagula Giri,
Myliddy South,
Tellippalai.
Printed at: **Mani Oosai & Harikanan** Printers.
Price: 80-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவேந்தர் வாழ்த்து

பண்பாட்டு வளர்ச்சிக்கான சமூகவியல், உளவியல் சிந்தனைகளை உள்ளடக்கிய **மரபுகளும் மாற்றங்களும்** என்ற நூல் வெளிவருவதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலின் ஆசிரியரான கலாநிதி. என். சண்முகலிங்கன் சமூகவியல் துறையில் சிறந்த புலமையும் பயிற்சியும் கொண்டவர். சமூக மேம்பாட்டில் நிறைந்த அக்கறையுடன் உழைத்து வருபவர்.

புதிய பல எண்ணக்கருக்களை எளிமையான தமிழில் தரும் இந்நூல், தொடர்பியலில் அவருக்குள்ள ஞானத்தினையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஏற்கனவே பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளை இத்துறைகளில் எழுதியுள்ள சண், பல சர்வதேச ஆய்வரங்குகளிலும் கலந்து புகழ் பெறும் இளம் கல்வியாளர்.

சமூக மேம்பாட்டுக்கான நல்லபல ஆக்கங்களை மேலும் அவர் தமிழுக்குத் தரவும், அவரின் தந்தையின் பெயரில் அமைந்த **நாகலிங்கம் நூலாலயம்** நின்று நிலை பெறவும் என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை**
**துணைவேந்தர்,**
**யாழ்பாணப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தமிழில் புதிய அறிவினைச் சேர்க்கும், தமிழர் பண்பாட்டினை மேம்படுத்தும் எங்கள் பணியில் புதிய வரவாக சண்முகனின் **மரபுகளும் மாற்றங்களும்.**

எங்களின் ஏழாவது வெளியீடு இது.

**பாதுகரவலன்** இதழில் பதிவுபெற்ற சிந்தனைகளின் தொகுப்பாக இந் நூல் வடிவம் பெறுகின்றது. நூலை வாழ்த்திய துணை வேந்தருக்கும், இந்நூலின் அழகுகாத்த யோசப்பாலா, சர்மா, இம்மானுவல், சனா ஆகியோருக்கும் என்றும் நன்றியுடையோம்.

6வது வெளியீடான, எங்கள் பேராசிரியர் மனோவின் உயிர்ப்பல்வகைமை நூலுக்கு நீங்கள் தந்த ஆதரவு, மென்மேலும் அறிவியல் நூல்களை தரும் எம் ஆர்வத்தை தூண்டிநிற்கின்றது.

கூடிய விரைவில் எங்கள் அடுத்த நூலில் சந்திப்போமே!

**திருமதி. நகுலேஸ்வரி நாகலிங்கம்**
**அதிபர்**
**நாகலிங்கம் நூலாலயம்**

**'நகுலகிரி'**
**மயிலிட்டி தெற்கு**
**தெல்லிப்பளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பண்பாடு என்பது வாழ்க்கை முறையாகவும், வாழ்வு க்கான அர்த்தமாகவும் அமைவது.

சமுகத்தின் அனைத்து மக்களுக்கும் சமமான வாழ் வினைதரும் திசையில் பண்பாட்டினை ஜனநாயகப் படுத்தும் பாரிய பணியிலே சமூக மேம் பாட்டில் உழைக்கும் அனை வரும் இன்று இணைந்து செயற்பட வேண்டியுள்ளது. இந்நிலையில் தேசிய அளவில் கொள்கை வகுத்தலும், செயற்பாடும் முதன் மைப் பணிகளாகின்றன.

மேம்பாடு என்பதனை வெறுமனே தலாவீத வருமானத் திரளாக அல்லது பொருள்சார் வளர்ச் சியாக கருதிய நிலைமை இன்று மாற்றம் காணும். மேம்பாட்டுக்கான இன்றைய சமூகவியல் வரைவிலக் கணங்கள் தனித்துவமானதும் ஒன்றுடன் ஒன்று தொடர்பானதுமான பொருளாதார, சமூக, பண்பாட்டு கூறுகளை உள்ளடக்கி நிற்கின்றன. இந்த வகையில் மூன்றாம் உலக நாடுகளின் மேம்பாடு தொடர்பான **போட்ஸின்** (Ports) வரைவிலக்கணம் குறிப்பி டத்தக்கது.

- **நீடித்து நிலைக்க கூடிய திசையில் தேசிய உற்ப த்தியின் துரித அதிகரிப்பு; இதன் வழி எதிர்கால விருத்திக்கு வழிகாட்டும் பொருளாதார சுதந்திரம்.**

- சமத்துவமான முறையில் **வருமான பங்கீடு; இதன்** வழி சமூகப் பண்டங்களான **கல்வி, சுகாதார** சேவைகள், போதுமான **வீட்டு வசதிகள், பொழுது** போக்கு வாய்ப்புகள், அரசியல் முடிவுகள் எடுத்த லில் பங்கேற்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேசிய அடையாளத்தையும் மரபுகளையும் உறுதிப் படுத்தும் திசையில் மேட்டுக்குடிகள், பொது மக்கள் என்ற வேறுபாடுகள் அற்ற புதிய சுய - பிரதிமைகளை காணல்: இதன் வழி இரண்டாந்தர பிரஜை என்ற உணர்வு நிலையை இல்லா தொழித்தல்.

**பொருளாதார உருமாற்றம்; சமூக உருமாற்றம், பண்பாட்டு உருமாற்றம்** என்ற தலைப்புக்களின் கீழ் போட்ஸின் வரை விலக்கணம் மேற்கண்டவாறு அமையும்.

பொருளாதார மேம்பாடு சமூக, பண்பாட்டு உரு மாற்றங் களை விளைவிக்கும்: சமூக-பண்பாட்டு உரு மாற்றம், பொருளாதார விருத்தியினைத் தீர்மானிக் கும்.

இந்த வகையில் மேம்பாடு என்பது, ஒரு சமூகம் அவாவி நிற்கும் இலக்கினை நோக்கிய, பொருள் சார் -பொருள் சாரா கூறுகளை உள்ளடக்கிய சமூக முழுமையின் மேல்நோக்கிய அசைவு என்றா கின்றது. இவ்வாறானதொரு கருத்தியல் பின்னணி யிலேயே மேம்பாட்டில் பண்பாட்டின் இடம் பற்றிய கவனம் இன்று அதிகரித்துள்ளது. சமூக ஒழுங்கு, பொருளாதார விருத்தி, வெளிவிவகாரம், தேசிய பாது காப்பு என்கின்ற குவியங்களைத்தாண்டி, **பண் பாட்டுக் கொள்கை** (Cultural policy) பற்றி இன்றைய அரசுகள் அக்கறை கொள்வது இந்த சிந்தனை விழிப்பின் தடத்தில் தான்.

நவீன வாழ்வில் ஒரு தேசத்து மக்களின் அபிலாஷைகளை எய்தும் வகையில் பண்பாட்டுக் கொள்கை வகுக்கப்பட வேண்டும். சுய பண்பாட்டு எழுச்சியும் வளர்ச்சியுமே இங்கு உச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்குகளாகும். நவீன வாழ்வின் மாற்றங்களிடை சுயத்தைக்காணும், பேணும் இந்தப் பண்பாட்டுக் கொள்கையின் இன்றியமையாமை எமது புலங்களில் பெரிதும் உணரப்படுவது. குடியேற்ற நாட்டாதிக்க கால செல்வாக்கினுள் முடமாகிப் போன சுதேச அடையாளங்களை மீட்டெடுத்தலிலிருந்து- இன்றைய நவகுடியேற்றவாத, உலகமயமாக்க அலைகளிடை தொலைந்து போன சுயங்களை மீளமைத்தல் வரை பண்பாட்டு பணிகள் எங்களைக் காத்திருக்கின்றன.

மேம்பாடு என்றாலே அது மேலைமயமாக்கம் தான் என்ற மயக்கம் கலைந்தாக வேண்டும். மரபு வழிப்பண்பாட்டின் செழுமையான அனுபவங்கள் பற்றிய மற்றதிக்குரிய மருந்தினை உடன் கண்டாக வேண்டும். கடந்த காலம் பற்றிய உணர்வை இழத்தலின் ஆபத்து, இன்றைய வாழ்வின் அனைத்து முகங்களிலும் உணரப்படுவது.

நவீனத்தை மரபின் எதிரியாக்கி, அதனையே மேம்பாட்டின் சாரமாகியதில் நாம் இழந்தவைகள்தான் அதிக மெனலாம்.

விண்ணைத் தொடும் அறிவு வந்தது உண்மை; ஆனால் மண்ணுள் மனிதம் புதையும் நிலைகளுக்கு அது துணையாகிவிடக் கூடாது. தொழினுட்பத்தின் உச்சம் மனித உயிர்களின் அழிவில் முடிதல் கூடாது. அறிவு அநீதிகளின் காவலன் ஆகிவிடக் கூடாது.

உண்மையில் **மரபும், நவீனத்துவமும் மனித சமூக மேம்பாட்டில் கைகோர்த்து நடைபோட வேண்டும்.** இந்தப் பயணத்தில் மரபின் தேவையற்ற கூறுக ளை தவிர்ப்பதும், அநீதியான பகுதிகளை அகற்று தலும் இயல்பாய் இணைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்பாட்டின் புத்தாக்கம்** என்பது பண்பாட்டுக் கொள்கையின் ஆதார சுருதியாய் அமையும் போது இந்த இணைவும் இசைவும் கைவசமாகும்.

பண்பாட்டுப் புத்தாக்கம் என்ற கனவு மெய்ப்பட, பண்பாடு தொடர்பான விழிப்புணர்வு அடிப்படை யாகின்றது. இந்தப் பண்பாட்டு விழிப்புணர்வை விதை ப்பதில் சமூக உணர்வு கொண்ட அனைத்து பிரிவி னரினதும் ஒன்றிணைதல் இன்றியமையாததாகின்றது. கவிஞர்கள், கலைஞர்கள், சமூக சிந்தனையாளர்கள், சமூக பணியாளர்கள் என பலரையும் உள் ளடக்கிய ஒரு **பண்பாட்டு இயக்கமாக** இந்த ஒன்றிப்பு முகிழ் தலும் அவசியமானதாகின்றது.

அநீதியான மேலாண்மைகளைக் கேள்வி க்குள்ளாக்கும், அழகான நற்பண்புகளை நிலை பேறா க்கும் பண்பாட்டு இயக்கமே மேம்பாடு தொடர்பான பண்பாட்டுக் கொள்கைகளின் செயல் முகவரென லாம்.

குடும்பம் - சாதி - சமயம் - அறிவியல் அமைப்பு என அனைத்து புலங்களிலும் பண்பாட்டு இயங்கங்களின் அறிவும் அனுபவமும் பயன் காண வேண்டும்.

நவீனவாழ்வின் உலகமயமாக்க அலைக ளில், நுகர்வு கலாசார நுரைகளில் துரும்பாகி அலையும் சுதேச பண்பாடுகளை மீட்கும், புதுக்கும் இந்த பணியை இனியும் தாமதமின்றி தீவிரப்படுத்த வேண்டும்.

காலம் தாழ்த்தியதில் கரைந்து போன பண்பாடுகளின் அனுபவங்கள் இந்த வகையில் எங்களுக்கான எச்சரிக்கைகளாகலாம். அதே வேளையில் சுய விழிப்புடன், உயிர்ப்புடன் பண்பாட்டு மறுமலர்ச்சிவழி மேம்பட்ட சமூக அனுபவங்கள் வழி காட்டிகளாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் என்ன செய்யப் போகின்றோம்...

தனித்தும் கூட்டாகவும் சாதகமான பதிலை எழுதும் சமூக பொறுப்பு, எங்கள் ஒவ்வொருவருக்கும் உரிய தாகின்றது. அர்த்தமுள்ள உரையாடல் ; அகல் விரிவான தொடர்பாடல் இந்த வகையில் எங்கள் வசமாக வேண்டும்.

கைவசமுள்ள ஆரோக்கியமான ஊடகங்களின் துணையுடன் அனைத்து புலங்களையும் எங்கள் குரல் தொடரவேண்டும். இந்தவகையில் **பாதுகாவலன்** பக்கங்களின் வழி தொடர்பாடிய பொழுதுகளே **மரபுகளும் மாற்றங்களும்.**

எங்கள் பண்பாட்டின் பலமான பக்கங்களையும், நலமான மாற்றங்களையும் தேர்ந்து தரும் சிந்தனைத் துளிகள்.

அச்சுக்கோர்க்கும் அண்ணனிலிருந்து ஏனைய நண்பர் வரை படித்துக் காட்டி, "மொழிபுரிந்ததா", "பொருள் தெளிந்ததா" என மிகுந்த கவனத்துடன் எழுதப்பட்டவை. சமூகத்தின் அனைத்து தளங்களையும் ஊடுருவி இவை விளைத்த தாக்கங்களை அவ்வப்போது எங்களைச் சேர்ந்த பின்னுட்டல் கடிதங்களின் வழி மதிப்பிட்டே எமது பணி தொடர்ந்தது.

கால கொடுமையாய் 95 இடம் பெயர்வுடன் நின்று போன இந்த தொடர்பாடல், இன்று மறு ஒலிபரப்பாக காலம் கைகொடுத்திருக்கிறது.

பண்பாட்டு மேன்மைக்கான பாரிய பணியில், உண்மையில் இது ஒரு "ராமாயண அணிலின்" குஞ்சுப் பணிதான். ஆனாலும் "இந்த குஞ்சுகள் ஒவ்வொன்றும் பாரதியின் அக்கினி குஞ்சுகள் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகசித்த வெளிச்சம் தரும் பொறிகள்" என்பார், இந்த குஞ்சுகளின் தாயான **அருட் தந்தை பிரான்சிஸ் யோசப்** அடிகளார். ஆமாம், பாதுகாவலனின் ஆசிரியராக வாராவாரம் அடைகாத்து அவர் தந்த அன்பில் விளைந்தனவே இந்த சிந்தனைக் குஞ்சுகள்.

இவற்றின் பிறப்பிற்கும், இந்நூலின் வடிவுக்கும் துணையான அருட் தந்தை பிரான்சிஸ் யோசப் அடிகளார், எங்கள் துணைவேந்தர், நண்பர் யோசப்பாலா, தம்பி சனாதனன், என் மாணவர்கள், வாசகர்களாகிய நீங்கள் என்றும் என் அன்புக்குரியவர்கள்.

**அன்புடன்**
**என். சண்முகலிங்கன்.**

'கந்தன் அருள்'
அம்பலவாணர் பாதை.
திருநெல்வேலி தெற்கு.
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 01. பண்டிகை தரும் புத்துயிர்ப்பு | 01 |
| 02. விளக்கு | 03 |
| 03. கல்வி | 05 |
| 04. உறவுகள் | 07 |
| 05. அன்பரண் | 09 |
| 06. சிந்தனை | 11 |
| 07. முதுமை | 13 |
| 08. சகுனங்கள் | 15 |
| 09. மனவெழுச்சிகள் | 17 |
| 10. முற்சாய்வு | 19 |
| 11. சுதேச பண்பாடு | 20-அ |
| 12. கூட்டுக் குடும்பம் | 21 |
| 13. கூட்டுவாழ்க்கை | 23 |
| 14. வசந்தவரவேற்பு | 25 |
| 15. உன்னதமான ஓர் ஆளுமை | 27 |
| 16. உடலோடு உள்ளமும்... | 29 |
| 17. மேலை மயமாக்கம் | 31 |
| 18. மனிதம் காக்கும் அகங்கள் | 33 |
| 19. துன்பத்தில் இன்பம் | 35 |
| 20. பாரதி தரிசனம் | 37 |
| 21. சீதனம் என்ற சீரழிவு | 35 |
| 22. சமூக மேம்பாடு | 41 |
| 23. பழையன கழிதலும் ... | 45 |
| 25. பண்பாட்டுத் தேக்கம் | 47 |
| 26. பயனும் வழியும் | 49 |
| 27. இன்று புதிதாய் பிறந்தோம் | 51 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. இலட்சியமும் யதார்த்தமும் 53
29. தாழ்வு மனப்பான்மை 55
30. முன்மாதிரிகள் 57
31. நண்பர் குழாம் செல்வாக்கு 59
32. தொடர் சாதனங்களின் செல்வாக்கு 61
33. உறக்கமும் விழிப்பும் 63
34. "தூங்கிறவனை தட்டி எழுப்பலாம்" 65
35. நல்ல கோபம் 67
36. அனுபவப் படிப்பு 69
37. அர்த்தமிழந்த குறியீடுகள் 71
38. இடம் பெயர் அவலம் 73
39. மனித சக்தி 75
40. மக்கள் பங்கேற்பு 77

மரபு வழியான
புதுமை இலக்கியமாய்
வாழ்ந்து கனிந்த
**அ.செ.மு** ஐயாவுக்கு
அர்ப்பணமாய் இந்நூல்

- சண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகை தரும் புத்துயிர்ப்பு 1

1 . 1 எங்கள் பண்பாட்டின் உயிர்ப்பிற்கும், உறுதியான தொடர்ச்சிக்கும் துணையாகும் கொண்டாட்டங்களிலே முக்கியமான இடத்தினைப் பெறுவது தைப்பொங்கல்-

அறுவடை கண்ட மகிழ்ச்சியில், தம் உழைப்பினுக்கு உதவி நின்ற அனைத்தினுக்கும் நன்றி சொல்லும் ஆனந்த விழாவாக பொங்கல் தை முதல் நாளில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றது. இந்நாளில்தான் சூரியன் வடக்கு நோக்கிய பயணம் ஆரம்பமாகிறது, உத்தராயண ஆரம்பம் எனப்படும் இந்த வேளையில் பொங்கலை சூரியனுக்கு அர்ப்பணமாய் படைத்து வணங்கும் மரபும் இணைந்திருக்கின்றது.

புதிய பானையில், புதிய அரிசி பொங்கல் பானையில்பால் பொங்கும் போது எல்லோரது உள்ளங்களிலும் மகிழ்ச்சியும் பொங்கும். தைபிறந்தால் வழி பிறக்கும்என்ற நம்பிக்கையும் காலங் காலமாக மக்கள் மனங்களில் உறுதி வளர்ப்பது.

1 . 2 இன்றைய எங்கள் பொங்கல் நினைவுகள் பலரது நெஞ்சங்களில் துயரங்களின் பொங்குதலாய் கண்ணீரையே வழியச் செய்யும். காலங்காலமாக பொங்கிய முற்றங்களை இழந்து போன மக்களும், கடந்த காலங்களில் கூட இருந்து பொங்கிய உறவுகளைப் பறிகொடுத்த மக்களும், உயிர் வாழ்வின் ஆதாரமான உழைப்புக்களங்களான உற்பத்தி நிலங்களை எட்டமுடியாத மக்களும் என இங்கு பொங்குகின்ற மனங்கள் பெருகும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் இவர்கள் நம்பிக்கையும், மரபினை பேணும் மனவலிமையும் தணிந்ததில்லை. அதிக முகாம்களிலும் பொங்குதல் நடக்கும்-

நாளை நம் முற்றங்களில் பொங்கல் பொழுதைக் காண்போம் என்ற நினைவுகளில் இன்றைய துய ரங்களை கரைத்து இந்த பொழுதிலேனும் வாழு தல் நிகழும்-

பண்பாட்டு பண்டிகைமரபுகளின் வலிமையே இது தான். மக்கள் வாழ்வில் புத்துயிர்ப்பு பெறலில் பண்புகள், - சடங்குகள் முக்கியம் பெறுவதாக, இன்றைய சமூகவியலாளர்கள் குறிப்பிடுவது இத னால் தான்.

1.2 பொங்கலைத் தொடரும் அடுத்தநாள் - மாட்டுப் பொங்கல். நவீன வளர்ச்சியில் முக்கியத்துவத்தை இழந்து வெறும் சடங்காக மட்டும் நடைபெற்ற இந்தப்பொங்கல் இன்றைய காலத்து மீண்டும் முன் னைய அர்த்தத்துடன் தழைப்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும். ஏர் உழவும், சூத்திரக்கிணறும் மீளஉயிர்க்கும் களங்களிடை, மனித நாகரிகம் தன் மனக்கதவு அடைத்துக்கொண்ட வேளையிலே சலியாது தோள் கொடுக்கும் மாடுகளை செல்வ மெனச் சீராட்டி, இங்கு மாட்டுப்பொங்கல். மானி டப் பொங்கலைவிட சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கு 2

2.1 மனித நாகரிகத்தின் உயர்ந்த கண்டுபிடிப்புகளில் ஒன்று விளக்கு. விளக்கு வெளிச்சம் அவனுக்கு இரவுப் பொழுதையும் அர்த்தமாக்க வழி சமைத்தது. தனக்கு ஒளி தந்த விளக்கை வழிபடுபொருளாகவும் கண்டான் மனிதன். இறைவனை ஒளி வடிவாக காணும் பொதுப்பண்பினை உலகமதங்கள் பலவற்றில் காணமுடியும்.

ஒளியான இறைவனை ஆராதிக்க ஒளி தரும் சாதனங்களான திருவிளக்குகளை அவன் பயன் படுத்தினான். மெழுகுவர்த்தியும், கற்பூரமும், ஏனைய ஒளிதரும் தீபங்களும் அவனது அன்றாட ஆராதனையிடை முக்கிய இடம் பெற்றன.

ஆலயத்தின் தீபம், இல்லங்களிலும் சிறப்பான இடம் பெற்றது. இல்லத்து வைபவங்களிலும் குத்துவிளக்கும், ஏனைய ஒளிதரும் விளக்குகளும் முக்கியம்பெற்றன.

இந்த வேளையில்தான் மின்சாரம், விஞ்ஞான தொழினுட்பத்தின் குழந்தையாய் பிரகாசித்தது. 'என்ன சொன்னாலும் மின்சாரம் லட்சுமிதான்' என்று அடிக்கடி என் அம்மா சொல்வதுபோல, மின்சாரம் மனித செல்வமாய், வெளிச்சத்தை மட்டுமன்றி அந்த வெளிச்சப்பொழுதுகள், சக்தியின்வழி பல முன்னேற்றங்களையும் எமக்குத் தந்தது. மனித நாகரிகத்தின் குழந்தையான மின்சாரம் உலக விளக்காக போற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 . 2 குடிசைகள் தோறும் இந்த நவீன விளக்கு ஒளிதர வேண்டும் என்ற எங்கள் பிரார்த்தனையும், முயற்சியும் வளரும் காலத்துதான் இங்கு மனித மனங்கள் இருண்டுபோயின. மின்சாரத்தை மட்டுமன்றி, அனுங்கும்குடிசை விளக்கிற்கு ஒளி தரும் மண்ணெய்யை கூட எங்களுக்கு கிட்டாத பொருளாகும்படி செய்தன.

ஆனாலும் இருளில் கிடந்து அழுதுகொண்டிருக்காமல், நாம் எங்களது மனவிளக்கின் வெளிச்சத்தில் உறுதியோடு பணிகளில் தொடர்வதன் வழி எங்கள் மனவளர்ச்சியை மட்டுமன்றி, சமூகபொறுப்பினையும் பிரதிபலித்து நிற்கின்றோம். அரிக்கன்லாம் பினையும் பாடும்கவிதையொன்றில் நான் சொன்னதுபோல்.

அன்றொரு பகலில், கிரேக்கத்து வீதியில்
உன்போல்ஒரு துணையுடன்
மனிதனைத் தேடும் ஞானியின் கதையை
மின்சாரம் கண்ட மனித நாகரிகத்தில்
மீளவும் நான் எழுதுவேன்
என்ற எங்கள் நம்பிக்கை, மின்சார விளக்கைவிட தூர, நீள ஒளிதருவது மனவிளக்கே நீ வாழி! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி 3

3. 1 கல்வி என்னும் சொல், கல்லுதல் - தோண்டுதல் என்ற வினையின் அடியாகப் பிறந்தது.

Education என்ற ஆங்கிலச் சொல்லும், வெளிக் கொணர்தல் – வளர்த்தல் என்ற பொருள்தரும் Edncere என்ற லத்தீன் சொல்லிலிருந்தே உருப் பெற்றது. உள்ளே உள்ள மனித ஆளுமையை வெளிக்கொணர்வதே கல்வி என விவேகானந்தர் கல்விக்கு தரும் வரைவிலக்கணம், மேலே குறித்த சொல் விளக்கத்தின் அடியானதே

தனிமனித ஆளுமை விருத்திக்கும், முழுமைக்குமான கருவியாக கல்வியை கண்ட அதே வேளையில் கல்வி யானது தன் சமூகத்தின், தான் வழங்கும் பண்பாட் டின் பிரதிபலிப்பாக உணரப்படும்

3. 2 ஆதிச்சமூகங்களில் வாழ்க்கையே கல்வியாகஅமைய, நவீன சமூகங்களில் வாழ்க்கைக்காக கல்வி என்ற நிலை காணப்படும்.

கல்வியை வெறுமனே சமூக அசைவுக்கான (Social Mobility) கருவியாக காண்கின்ற நிலைமை புதிய சமூக மாற்றங்களின் விளைவாக வந்தது. எங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைப் பொறுத்தவரை குடியேற்ற நாட்டாதிக்கம் தன் தேவைகளுக்காக திணித்த ஒரு கல்விமுறையின் வழியே, இன்றைய கல்வி பற்றிய விழுமியங்கள் தீர்மானமாயின.

கல்வியை தந்திரமான வாழ்க்கை முன்னேற்றத்துக்கான கருவியாக எமக்கு தந்துள்ள அந்நிய ஆதிக்ககால அமைப்பே இன்னும் தொடராமல், வெறும் சோற்றுக்கும் சுகத்துக்குமென சுயநலக் கல்வியாக அமையாமல், அறிவின்வழி சமூக முன்னேற்றமும், மானுடமும் வாழவேண்டும். **யூலியன் ஹக்ஸலி** சொன்னதுபோல, **அறிவியலில் எழுகின்ற மனிதத்துவம்** கல்வியால் இங்கு கனிய வேண்டும்.

ஆமாம்! மனம் உள்ள அறிவு, கல்வியின் பயன் ஆதல் வேண்டும்.

ஐ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் 4

4.1 சமூக வாழ்வு என்பது பல உறவுகளின் இடை வினையால் (Interaction) விளைவது. குடும்பம், நட்பு, பள்ளிக்கூடம், தொழில் நிலையம், சமூக சமய அமைப்புகள் என விரியும் புலங்களிடை பற் பல உறவுகள். இந்த உறவுகளிடை ஒரே மனிதன் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களை தாங்க வேண்டிய நிலை, இந்த பாத்திரங்கள் பற்றிய சமூக எதிர்பார்ப்புகள், பண்புகள் பல ஒவ்வொரு பாத்திரமும் சிறப்பான இயல்புகளை வேண்டி நிற்பன.

இந்தப் பாத்திரங்களை நன்கு புரிந்து கொண்டு, இடைவினைக்குள்ளாகும் போது உறவு நிலை சீராக அமையும்.

எனினும் இந்தப் புரிந்துகொள்ளலும், புரிந்தவாறு நடந்து கொள்ளலும் சாத்தியமாக, உறவில் தொடர்புபடும் எல்லோரிடத்தும் இத்தகைய தெளிவு வேண்டப்படும்.

இந்த தெளிவினை எந்தளவுக்கு பெற்றுக்கொள் கின்றோமோ அந்த அளவிற்கு சமூக வாழ்வு இலகு வாகும் என்பதனை இன்றைய சமூக ,உளவியல் ஆய்வுகள் காட்டிநிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.2 ஒருவர் பாத்திரத்தை மற்றவர் புரிதல் என்பது போலவே ஒருவன் தன் வாழ்விடை சந்திக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களை புரிதலும், அவற்றிடை சந்திக்கும் முரண்பாடுகளை தெளிதலும் அவசியமாகின்றது. குடும்ப நிறுவனத்துக்குள்ளேயே அன்னைக்கு மகனாக, மனைவிக்கு கணவனாக, பிள்ளைக்கு தந்தையாக என்று வேறுபட்ட பாத்திரங்கள். குடும்பத்துக்கு வெளியே, பள்ளிக்கூடத்தில் மாணவன், தோழன் என விரியும் உறவுகள். தொழில் நிலையங்களில் பல வேறுபடி நிலைகளில் பாத்திரங்கள்.

நவீன வாழ்வில் இவ்வாறான உறவுகளின் எண்ணிக்கையும் வேறுபாடுகளும் அதிகரித்து செல்வன. புதிய புதிய பாத்திரங்களையும், அவற்றுக்கான திறன்களையும், கடமைகளையும் தரும் மாற்றங்களிடை ஒரு தனியனின் வாழ்க்கை, முன்னைய எளிமையான சமூகங்களைவிட இன்று சிக்கல் மிகுந்ததாகும்.

மாறுபடும் இத்த உறவுகளிடை பாத்திரங்களிடை ஒரு சமநிலையைக் காணும் அதேவேளையில் தன் நடைமுறையின் வழி இப்பாத்திரங்களுக்கு புதிய அர்த்தங்களையும், வளர்ச்சி நிலைகளையும் தருகின்ற பணியும் நம்மைச் சேர்வன சமூக மேம்பாட்டுக்கு தடையான உறவுச் சிக்கல்களை, பாத்திர கூறுகளை இனங்கண்டு அவற்றை உரியவாறு சீரமைக்கும் மாதிரிகளை காண்பதும், இன்று நம்மை எதிர்நோக்கும் அவசர பணியாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பரண் 5

5.1 மனித உறவுகள் சீராக இயங்குவதற்கு பரஸ்பர புரிந்துணர்வு இன்றியமையாதது. குறுக்குச்சுவர் ஏதும் இல்லாதபடி நம்பிக்கையுடன் இணையும் உற வுகளிடைதான் மகிழ்ச்சியும் அர்த்தமும் விளைய முடியும்.

நவீன வாழ்வில் உறவுகளின் எண்ணிக்கை மட்டு மன்றி, இந்த உறவுகளுக்கான பாத்திர வேறு பாடுகளும் அதிகரித்துச் செல்வன, இந்நிலையில் அடிப்படை உறவு அலகான குடும்பத்துக்குள் ளேயே உறவுச்சிக்கல்கள், திரைகள், தீவுகளாகும் தன்மை வளர்வன.

என்றுமில்லாதவாறு சமூகவாழ்வில் இந்த மனத் திறப்பின் வழியான உறவுகளின் தேவை அதிக ரித்துச் செல்லக் காணலாம்.

5.2 கவிஞர்கள் கலைஞர்கள், வாழ்க்கைக் கலையில் தேர்ந்தவர்கள் இந்த சிக்கல் நிலைகளைப் புரிந்து கொண்டு தமது வாழ்விற்கு மட்டுமன்றி உலகுக்கும் ஒளி தருபவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் **ஆங்கிலக் கவிஞர் எலியட்** சித்தரித்த பாத்திரம் ஒன்று நவீன சமூக வாழ்வின் இந்த உறவுத் தேவையை உணர்த்தும் அருமருந்தாகும்.

இப்படி ஒரு உறவு — ஒரே ஒரு உறவு ஒருவன் வாழ்வில் கிடைத்து விட்டால்...

எல்லாவற்றையும் அவனிடம் ஒப்புவிக்க... எல்லாம் என்றால்,

உன் குற்றங்களை மட்டுமல்ல,

........................... ... .. ............

நீ முட்டாளாக, அசடனான நிகழ்வுகளையும் மனதைத்திறந்து சொல்லிவிட வேண்டும்.

இப்படி ஓர் உறவு இருந்தால்...

அவனிடம் எனக்கு உண்மை அன்பு என்றுபொருள். இந்த அன்பே என்னைக் காக்கும்.

உங்களுக்கு இப்படி உறவு வாய்த்திருக்கிறதா? நவீன சமூகவாழ்வின் முரண்களிடை நாம் உடைந்து போகாமல் காக்க இந்த அன்பு அரண் உடன் வேண்டும். இதன் தேடலும் அர்த்தம் தரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை 6

6.1 மனிதனுக்கு மட்டும் சொந்தமானது சிந்தனை. சிந்தனையே மனித சமுதாய மேம்பாட்டின் அடிப் படையாவது. சிந்தனை முறைமையை ஆராயும் சமூக—உளவியல் தேடல்கள் எல்லாம் அறிவுபூர்வ மான சிந்தனையின் அவசியத்தை உணர்த்தி நிற் பன. மரபுவழி, அறிவுத்திரளும், சிந்தனை முறை மைகளும் எம்மைச் சேர்ந்தாலும் அவற்றிடை வேண்டாதன விலக்கும் அவசரமும் உலக சமூகங் களிடை பெரிதும் உணரப்படும் ஒன்று. இதனை எய்தும் கருவியாகவே கல்வி கைகொடுக்கும். கல்வி யில் கணிதம், விஞ்ஞானம் போன்றவை கலைத் திட்ட முக்கியத்துவம் பெறுவது. அறிவு நிலை யான சிந்தனையை, மனப்பாங்கை வளர்த்தலின் அவசியம் கருதியே.

6.2 எனினும் நடைமுறை யதார்தம்? கல்வி தரும் கணிதமோ, விஞ்ஞானமோ பிற அறிவுச் செல்வங் களோ கண்மூடித்தனமான யந்திர தன்மையான திறன்களாலே பெரிதும் எய்தப் படுகின்றன மரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி சேரும் முற்சாய்வு (Prejudice) எண்ணங்களை, ஒரே வார்ப்பிலான (Stereo type) சிந்தனைத் தடையங்களை உணரா நிலைகளே அதிகம்.

6. 3 கல்வியில் வல்லவர் என்பது அறிவு பூர்வமான சிந்தனை வாய்க்கப் பெறுவதிலேயே தீர்மான மாவது. உதாரணமாக கணிதத்திறன் என்பது காசு தேடும் பெரிய தொழிலுக்கான அல்லது பின்னாளில் கிடைக்கும் 'மணியான' சீதனத்தை எண்ணுதற்கான கெட்டித்தனம் அல்ல; கணிதம் தரும் தர்க்க ரீதியான விஞ்ஞான ரீதியான சிந்தனைத் திறன் — அது சார்ந்த மனப்பாங்கு நிலையே வேண்டப்படுவன. வேதிமர் (Wertheimer) என்ற உளவியலாளர் தன் ஆய்வுகளின்டியாக முன்வைக்கும், **'சுயமான, விஞ்ஞான ரீதியிலான சிந்தனையின் அவசியம்,** எங்கள் சமூகத்திலும் பெரிதும் உணரப்பட வேண்டிய ஒன்று. ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமை 7

7. 1 முதுமையடைதல், உலகப் பொதுவான ஒரு பருவ மாறுதல், எனினும் உலகப் பண்பாடுகள் இப்பருவத்தினை எவ்வாறு நோக்குகின்றன என்பதனைப் பொறுத்து, முதுமை வேறுபட்ட அனுபவங்களைக் காணும்.

முதியவர் ஒருவர் இறக்கின்ற போது ஒரு பெரும் நூலகமே எரிகின்றது என்பது ஆபிரிக்க பழமொழி; இது அந்த பண்பாடு முதுமைக்கு தந்த மதிப்பினை காட்டும்.

7. 2 எங்கள் பண்பாட்டின் நிலை என்ன ?
வீதிகளில், வீடுகளில் இன்று அதிகமதிகமாக கேட்கப்படும் 'பழசு' 'ஸ்நயின்ரி' போன்ற புதிய கலைச்சொற்களை எங்கள் பண்பாட்டில் முதுமை பற்றிய மனப் போக்கின் பிரதி பலிப்புகளாக கொள்ளலாமா ?

அதிகரித்து வரும் முதியோர் பராமரிப்பு இல்லத் தேடல்களும், அகதி வாழ்வில் அதிக பாதிப்புக்குள்ளாகும் நிலைமைகளும், இந்த பாதிப்புகளின் அடியாக அதிகரிக்கும் முதியோர் உளநோய் பற்றிய தரவுகளும் அதிக ஆராய்ச்சியின்றி முதுமை இங்கும் புறக்கணிக்கப்படுதலை நிறுவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. 3 முதுமையடைந்தமைக்காக ஒதுக்குதலும் அடக்குதலும், பாரபட்சம் காட்டுதலும் ஏனைய சமூக அநீதிகளை ஒத்தனவே என்ற உணர்வு இன்று மேலை உலகில் கிறே பவர் (Cray Power) இயக்கங்களையும் தோற்றுவிக்கும். இங்கு பெஞ்சனியர் சங்கங்களுக்கு அப்பால் போக சக்தியில்லை.

முதுமையை பேணுவதென்பது, பழமை பேண்வாதமாக வேண்டியதில்லை; முதியவரை 'பழசு' என்று தள்ளும் 'இளசுகள்' எல்லோரும் முற்போக்கு வாதிகள் என்றுமில்லை.

பெற்றவரை தெய்வமாகக் காணும் ஒரு பண்பாட்டின் எச்சங்கள், அவர்களை அநாதைகளாக்கி நிற்கும் நிலை மனிதமல்ல. அதுபோலவே அனுபவ ஞானம் கொண்டவரை, வயதின் அடிப்படையில் சமூகத்திலிருந்து தள்ளுதல் முன்னேற்ற வழியுமல்ல.



மரபுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகுனங்கள் 8.

8. 1 சகுனம் பார்த்தல் எப்படியோ எமது சமூக உள வியலில் ஆழ இடம் பிடித்திருக்கிறது ஒன்றா, இரண்டா: ஒரு பெரும் பட்டியலே போட்டு விடலாம். பின்னாலே நிகழப்போகும் தீமையை நன்மையை புலப்படுத்தும் சகுனங்களை, நாட்டார் வழக்கியல் கதைகளும், நம்பிக்கைகளும் ஆழப் பதிந்து நிற்கின்றன.

விரிச்சி கேட்டல், புள் நிமித்தம் பார்த்தல் என பழந்தமிழ் இலக்கியங்களிலும் இதன் தொன்மையை காணமுடியும்.

காக்கையாரிலிருந்து கழுதைவரை நிறைய சகுன காரர்களை சந்திக்க முடியும்.

ஆந்தை அலறுதல், காகம் கரைதல், பூனை குறுக்கால போதல் என இதற்கான நிகழ்வுகள் அடையாளம் காணப்படும்.

'மடியிலே பூனையைக் கட்டிக்கொண்டு சகுனம் பார்த்தானாம்' என்று ஒரு பழமொழி கூட வழக்கில் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. 2 சகுனங்கள் பலவற்றினதும் தோற்றக் காரணிகள் இன்று அறியப் படாமலே இறந்தவை ஆகும். ஆனால் இத்தனை அறிவு - கல்வி — மறுமலர்ச்சிகளின் பின்னாலும் சகுனம் பார்த்தலின் தீவிரம் குறைவதற்கான சகுனம் மட்டும் தெரியவில்லை.

8. 3 சகுனங்கள் பற்றிய தோற்றக் காரணிகள் பற்றி முழுமையான அறிவு கிடைக்காது போனாலும், அவை எங்கள் சமூக மதிப்பீடுகளின் அளவீடாகத் திகழ்கின்றமையை சிந்தையில் கொள்ளலாம் எடுத்துக்காட்டாக கணவனை இழந்த பெண் ஒரு திக்கு சமூகம் தருகின்ற தாழ்மதிப்பின் வெளிப்பாடாக, அவளை சகுனப் பிழையாக காண்பதில் இதனை உணரமுடியும். பெத்த பிள்ளையின் மணவினையில் கூட அவளை பின் தள்ளச் செய்யும் இந்தச் சகுனக் கொடுமை.

8. 4 உளவியல் ரீதியான வகுத்தல்களுக்கு மட்டும்தானா சகுனம் காரணமாகிறது? சகுனம் பார்த்துப் பார்த்து நாம் பின்தங்கிவிட்ட தூரம் கொஞ்சமல்ல; சகுனங்களின் தோற்ற உளவியல், விழுமிய நிலைமைகளை புரிந்து கொண்டு இனியேனும் அறிவுபூர்வமாக எங்கள் செயற்பாடுகளை அமைப்போமா? ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெழுச்சிகள் 9

9.1 மனித இயல்பாக, உள, உடலியல் உணர்வுச் செயற்பாடாக அமைவது மனவெழுச்சி, சிரிப்பு, அழுகை, அச்சம் என மனவெழுச்சி வெளிப்பாடுகள் பல.

இயல்பான உள்வியல் கூறாக இது அமைந்த போதும், இதனைக் கட்டுப்படுத்தலும் வளர்த்தலும் சமூக பண்பாட்டுக் கோலங்களின் வழியானதே. எதற்கு – எப்படி நடந்து கொள்வது என்பதெல்லாம் பண்பாட்டின் வழி சமூக மயமாக்கலில் எங்களுக்குச் சொல்லித்தரப்படுவன. இவை எங்கள் சமூகம் எமக்குச் சொல்லித் தரும் விழுமியங்கள் – மரபுகளின் தன்மையைப் பொறுத்து அமைவதும் இயல்பானதே.

9.2 இன்னிலையில் பல மாற்றங்களை — வளர்ச்சி நிலைகளை வேண்டும், ஒரு சமூகத்தின் அங்கத்தினர் தம் மனவெழுச்சி பற்றிய அறிவு பூர்வமான தெளிவினைப் பெறுவது இன்றியமையாததாகின்றது. எடுத்துக்காட்டாக சின்ன வயதிலேயே எங்களுக்குள் பேய் என்றும் பிசாசென்றும் பூதாகரமான அச்சத்துக்கான மூலகங்கள் தரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோலவே அறிவியல் அடிப்படையில்லாத பல மனவெழுச்சி வெளிப்பாடுகளை நாம் இனம் காண முடியும்.

9. 3 மனவெழுச்சி வளர்ச்சி என்பது வெறுமனே இருக்கின்ற சமூக சூழலில் இனிதாய் பொருத்தப்பாடு காண்பது என்ற நிலைக்கும் அப்பால், இனிக்காண விரும்பும் சமூகத்து விழுமியங்களை எய்துதற்கான கருவியாகவும் அமையவேண்டும்.

இந்தச் சிந்தனை வளர்ச்சி, எங்கள் மனவெழுச்சிகளை அர்த்தமுள்ளனவாக்கும். பெற்றோர் — ஆசிரியர் — சமூகவளர்ச்சியில் அக்கறை கொண்டோர் இந்த சமூக மனவெழுச்சி கூறுகள் பற்றிய அறிவையும் உணர்வையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான், இனிவரும் சமூகத்து மனவெழுச்சிகளும் மேம்படும்; சமூக மேம்பாட்டுக்கான மனவெழுச்சி நிலைமைகளும் உருவாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்சாய்வு 10

10. 1 தனிமனித உறவுகளிலிருந்து - குழு, இன, தேச உறவுகள் வளர **முற்சாய்வின்** தாக்கம் உணரப்படும்

ஒருவரை விரும்பவும், வெறுக்கவும் அவரைப் பற்றிய எம் முன் அறிமுகம் அடிப்படைகளாகின்றன. முன்னதாகவே சாய்வான ஓர் அபிப்பிராயம் விழுந்தபின், பின்னாலே என்னதான் நிகழ்ந்த போதும் மாற்றமின்றி அதே தடத்தில் உறவின் தன்மையையும் தொடர்வதே பெரும்பாலான அனுபவங்கள் எனலாம்.

10. 2 முற்சாய்வான அபிப்பிராயங்களில் பெரும்பாலானவை, மரபுவழியாக எம்மைச் சேர்வன: பாதகமான விளைவுகளைத்தருவன. 'கட்டையனை நம்பாதே' என்றொரு பழமொழி — 'பெண்புத்தி பின்புத்தி' என மற்றொன்று. ஒன்று உருவத்தை அடிப்படையாகக் கொண்டது; மற்றையது பால் அடிப்படையிலானது. இதுபோலவே இன உறவுகளிலும் முற்சாய்வின் பாதிப்புகள் - இவற்றினை உணராத காலங்கள் போய், இன்று சமூக அறிவியல் வளர்ச்சியினால், இன உறவில் முற்சாய்வின் பாதிப்புபற்றி நிறைய சமூகவியல், சமூக உளவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆய்வுமுடிவுகளும் கிடைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.3 இன உறவு முறுகல், விரிசல், வெடிப்புகளுக்கெல்லாம் இந்த முற்சாய்வான அபிப்பிராய பதிவுகள் அடிப்படையாகி உள்ளமைபற்றி எத்தனை ஆய்வுகள் வெளியாகி என்ன? இன்னமும் சமூக குழுக்களிடையான உறவுகளைப் பாதிக்கும் முற்சாய்வான எண்ணங்கள் குறைந்த பாடில்லை. இனம் நிறம், பால், சாதி என்னும் அடிப்படைகளில் முற்சாய்வான பிரதிமைகளை ஏற்படுத்திக் கொள்ளுதலும். அதன்டியான பாரபட்சங்களும் தொடர்கதைதான்.

10.4 ஏன் இந்தநிலை? முற்சாய்வுக்கு தாம் உள்ளாகியிருப்பதனை உணராமை காரணமாகின்றபோது அதனை உரிய சமூக அறிவியல் கல்விவழி களையமுடியும். ஆனால் இந்த அறிவுகளை தருகின்ற தேசங்கள், அறிஞர்கள் மத்தியிலேயே முற்சாய்வின் தாக்கம் நிலைபெற்றிருப்பதனை என்னவென்று சொல்வது? நம் நாட்டு கலைஞர் மகாநுபாவன் கவிதையொன்றில் குறித்தவாறு

'தூங்குகிறவனை எழுப்பலாம்
உங்களை
என்ன செய்யலாம்' என்றல்லவா
ஏங்கவைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச பண்பாடு 

11.1 பண்பாடு என்பதற்கு, தொன்மைப் பண்பாடு (Primitive Culture) எனும் நூலில் ரெயிலர் என்ற மானுடவியலாளர் தந்த வரைவிலக்கணம் இன்று வரை நிலைபெறுவது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலான வையும், சமூக உறுப்பினராக ஒருவர் கற்கும் பிற திறன்களும், பழக்கங்களும் அடங்கிய முழு மையான தொகுதியே பண்பாடு என்பது அவர் வரையறை

ஒரு குறித்த பண்பாட்டு புலத்தின் வரையறைக் குள் அல்லது தேச எல்லைகளுக்குள் இந்த அம் சங்களை இனங்காட்டும்போது அது சுதேச பண் பாடாக வரையறை பெறும்.

மரபுவழி சமூக அமைப்புகளிடை சுதேச பண்பாடு களின் தனித்துவமும், நிலைபேறும் தெளிவாகவே வெளிப்படும்.

11.2 மாறும் சமூக நிலைகளில் பண்பாட்டுக் கூறுகளி டையேயும் மாற்றங்கள் தவிர்க்கமுடியாதனவாகும் போது, சுதேச பண்பாட்டின் தனித்துவமும், இருப்பும்கூட கேள்விக்குள்ளாகலாம்.

புதிய கண்டுபிடிப்புகள், பிற பண்பாடுகளுடனான தொடுகை, பரவல், நவீன மயமாதல், உலக மயமாக்கம் என பல காரணிகள் பண்பாட்டு மாற்றத்தின் அடிப்படைகளாகின்றன.

11.3 மாற்றங்களை அப்படியே தழுவி வரவேற்கும் பண்பாடுகள், முழுமையாக புதிய மாற்றங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கும் எதிர்க்கும் பண்பாடுகள், புதிய மாற்றங்களிடையேயும் தம் பாரம்பரிய பண்பாட்டு மரபுகளை இசைவுடன் மீளுருவாக்கம் செய்யும் பண்பாடுகள் என மாற்றம் தொடர்பான பண்பாட்டு நிலைமைகளை பேஜர் என்ற மானுடவியலாளர் இனங்காட்டுவார்.

11.4 நவீன மாற்றங்களை முழுமையாக வரவேற்கும் பண்பாட்டு நிலைமைக்கு எடுத்துக்காட்டாக மெலனீசிய Cargo Cult சரக்கு வழிபாட்டினை ஆய்வுகள் சுட்டும். இங்கு இறந்துபோன வெள்ளையன் அடுத்த உலகிலிருந்து நிறைய பொருள் பண்டங்களுடன் வருவான், அனைத்தும் தருவான் என்ற நம்பிக்கை வழிபாடாகும்.

Prairee — பிறைரி இந்தியர்களிடம் நிலவும் பேய் நடனம் (Ghost dance) நவீன மாற்றங்களை முற்றாகத் தள்ளும் நிலைக்கு எடுத்துக்காட்டாக இனம் காட்டப்படும். இங்கு இறந்த தம் மூதாதையர் மீள வந்து வெள்ளையனைத் துரத்தியடிப்பர் என்பது நம்பிக்கையாகும்.

நவீன மாற்றங்களுக்கும் எதிர் நவீனமயமாக்கத்துக்குமிடையிலான கூட்டிசைவின் வழி புதிய மாற்றங்களையும் மரபுகளையும் இசைவாக்கம் செய்து புதிய பண்பாட்டு மாற்றங்களை காணும் நிலைமைக்கு இன்றைய மூன்றாம் உலக நாடுகள் பலவும் சாட்சிகளாகலாம்.

சுதேச பண்பாடுகளின் அர்த்தமுள்ள நிலைபேறும் மேம்பாடும், இம் மூன்றாவது நிலைப்பாட்டின் வழிதான் சாத்தியமாகும். இன்றைய உலக மயமாக்க அலைகளிடை மிகுந்த விழிப்புணர்வுடன் இந்த இசைவினைக் காணவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுக் குடும்பம் 12

12.1 உலக குடும்ப ஆண்டாக, ஓர் ஆண்டை ஐக்கிய நாடுகள் நிறுவனம் பிரகடனம் செய்துள்ளமையை அறிவீர்கள். உலகின் எல்லா பண்பாடுகளிலும் தொன்மையானதோர் சமூக நிறுவனமாக தொடரும் குடும்ப நிறுவனத்தின் பயன்பாடு, நாம் ஒவ்வொருவரும் அனுபவ தரிசனமாக தினமும் உணர்வது.

பண்பாட்டினடியாக, இந்த நிறுவன அமைப்பிலே வேறுபாடுகளை, மாற்றங்களைக் காணமுடிகிறது. இந்த மாற்றங்களில் இந்த நிறுவனத்தின் அர்த்தத்தை, பயன்பாட்டை இழக்கச் செய்யும் பல கூறுகளை நாம் இனங்காண முடியும்.

12.2 எங்கள் பண்பாட்டைப் பொறுத்தவரை பெற்றோர், பிள்ளைகள் — பேரப்பிள்ளைகள் — இன்னும் இரத்த உறவுகள் ஒன்றாய் வாழும் கூட்டுக் குடும்ப அமைப்பின் நலன்களை, நவீன வாழ்வில் அல்லது மேலை மயமாக்கத்தில் இழந்து கொண்டிருப்பதை ஏனோ நம்மில் பலர் சிந்திப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. 3 பெற்றோர்களை முழு முதலாகக் கண்ட ஒரு பண்பாட்டின் வரலாறு, அவர்களை அனாதைகளாய் அல்லது வயோதிப இல்ல வாசிகளாய் ஆக்கிவிடும் நிலைமைகள் இங்கு கூர்மையாய் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

வீட்டுக்குள்ளேயும் தனிமைப்படுத்துதலும், தனித்தனி உலைகளை ஊதும் அவலங்களும் நம் கண்ணிலே படவேண்டும்.

கூட்டுக்குடும்ப அமைப்பின் பயன்களை உணரவும், இந்த அமைப்பின் குலைவுக்குக் காரணமான அம்சங்களை இனங்கண்டு, சீர்செய்யவும் **வேண்டிய உணர்வினைப்** பெறுவதே முதல்தேவை —

12. 4 மேலைப் புலம்போல அழிந்துவிடாமல், உள்ளே கனன்று கொண்டிருக்கும் இந்தப் பிரச்சினையை எமது பண்பாட்டு அணுகுதலின் வழியும், உலக பண்பாட்டு அணுகுதலின் வழியும் உலக பண்பாட்டு அனுபவங்களின் வழியும் மீளமைக்க சமூகப்பணியிலுள்ள அனைத்து அமைப்புகளும், பணியாளர்களும் முன்வர வேண்டும்.



**மரபுகளும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு வாழ்க்கை 13

13.1 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பது பழமொழியாக, இன்று தனிவாழ்வு முக்கியத்துவம் பெறும். அடிப்படைச் சமூக அமைப்பு கூட்டு வாழ்வுக்கு இசைவானதாக அமைந்த போதிலும் மேலைமயமாக்க அலைகளிடை இந்த தனி வாழ்வு போட்டிகளிடை எங்கள் கூட்டுவாழ்வும் சிதையும்.

அந்த நாட்களில் குடும்ப நிலையிலிருந்து சமூக வாழ்வு வரை கூட்டுவாழ்வின் கனிகளை நாம் சுவைக்க முடிந்தது. விவசாய பொருளாதார உற்பத்தியிலிருந்து ஏனைய கலை, சமயம் சார் பண்பாட்டு நடவடிக்கைகள் வரை இந்த கூட்டு வாழ்வின் இன்றியமையாமை உணரப்பட்டது. உதாரணமாக,

அயல் தோட்ட இறைப்பில், நண்பர்கள், சகோதரங்கள் ஒன்று சேர்வதும் பயிர் நடல் வரை ஒருவருக்கொருவர் உதவியாதலும் இன்று காசுக்காய் விலைபோனது.

முன்பெல்லாம் ஒருவர் வீட்டில் பனம் பாத்தி போட்டால் அந்தக் குடும்பமே அதன் பலாபலன்களை சேர்ந்து சுகிக்கும் இணைவிலிருந்தது.
இன்று

பாத்தியோடு மொத்தமாக விற்றுவிட்டு, சொந்தக்காரனும் காசுக்கு இரண்டை வாங்கி கடிக்கின்ற வாழ்வாகும். மாமரம் பழுத்தால், மரத்தோடு விலைபோகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.2 கூட்டுவாழ்வின் கனிகளை மீண்டும் நாம் சுவைக்க முடியாதா ?

இந்த உலக குடும்ப ஆண்டில் முன்னைய எங்கள் கூட்டுவாழ்வின் மீட்கும் சிந்தனை - செயல் இன்றி யமையாத தேவையாக உணரப்படவேண்டும்.

எங்கள் மரபுவழிப் புலங்களில் - கிராமங்களில் இன்றும் கூட்டு வாழ்வின் எச்சங்கள் அதன் பயன் பாட்டினை உணர்த்தி நிற்கக் காணலாம்.

எடுத்துக்காட்டாக முல்லை மண்ணின் விவசாயப் புலன்களில் இன்றும் 'பரத்தை போடுதல்' கூட்டு விவசாய முயற்சியின் குறியீடாக நிலைத்து நிற்கக் காணலாம்.

இன்றைய எமது சூழல், இவ்வாறான கூட்டு வாழ் வின் அவசியத்தை நிர்ப்பந்திக்கும் நிலையிலேனும் நாம் அதன் முக்கியத்துவத்தினை உணரும் விழிப் பினையடைய வேண்டும்.

தொழினுட்பமும் - மேலைக் கலாசாரமும் எமது மரபுவழி வாழ்க்கை முறையினை அநாவசியமாக சிதைக்க அனுமதிப்பதனை இனியும் தொடர லாமா? இழந்து போன இந்த வாழ்வுக்காக, அந்த உலகமே இன்று ஏங்கும் நிலமைகளில், இங்கு வேர் விட்ட எங்கள் பயன் மரத்தின் கனிகளை நாங்கள் இழந்து போகாமல், மீண்டும் கூட்டு வாழ்வில் கோடி நன்மைகள் காண்போம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்த வரவேற்பு 14

14. 1 சித்திரை மாதம்- வசந்தம் எனப்படும் இளவேனில், இனிமைகளை சுகிக்கின்ற காலம்.

இந்த கால இனிமையில் இயற்கையோடு இயைந்து தமிழன் கண்ட காலக்கணிப்பிலே வருவது தான் சித்திரைப் புத்தாண்டு.

மார்கழி முதல் நான்கு மாதம் பனிக்காலமாக, அந்தப்பனி கூறுப்படும் மாதமாக பங்குனி அமையும். பெய்த பனியும், படிந்த தூசும் அகல வானம் சித்திரமாய் வெய்யில் ஒளியில் சிரித்திருக்கும் அழகிய காலமாக சித்திரை மலர்கிறது.

இதுபோலவே பன்னிரு திங்களும் இயற்கையோடு இயைந்த பெயர்களாய் இனிப்பன.

இயற்கையின் மாற்றங்களை, காலமாற்றங்களே, காலக்கணிப்பின் அடிப்படைகளாகக் கொண்டு அவற்றையே பண்டிகை கொண்டாட்டங்களாகவும் கண்ட ஒரு மரபின் தொடர்ச்சியாகவே புத்தாண்டும் சித்திரையில் வருகிறது. புதிய மகிழ்ச்சியும் மலர்கிறது.

14. 2 புதிய ஆடைகள், புதிய சிந்தனைகள், புதிய உற்சாகம் என புத்தாண்டில் புது மலர்ச்சி காணும் புத்தாண்டு வசந்த வரவேற்பு. காலங் காலமாய் வசந்தமாய் வந்த இந்த பொழுதுகள்,

இன்று வெறும் காலக் கணிப்பாய், 'கலண்டர்' மாற்றத் திகதியாய் ஆகுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையை விஞ்ச நினைத்த மனிதனின் தொழில் நுட்பமும், பேராசையும் இயல்பான மனிதனின் வாழ்வை குலைத்து, வசந்தகாலத்து இனிமையைத் தின்னும் வக்கிரமாகும்.

இயற்கைச் சூழலை அழித்ததில் பருவகாலப் பண்புகள் குலைந்துபோகும்.

மனிதனை மனிதன் அடிமையாக்கும் வக்கிரப் போர் நிலைமைகளால் வசந்தகாலமும் கசந்த காலமாகும்.

புதிய வசந்தத் தளிர்கள் மட்டுமன்றி, மனிதத் தளிர்களும் கருகுகின்ற துயரங்களாகும்.

14.3 ஆனாலும், இத்துணை துயர கருக்கல்களிடையேயும் பண்பாட்டின் வலிமை, அகத்திலேனும் நம்பிக்கையுடன் சிரிக்கும்.

'**நாளை வசந்தம் வரும்**' என்ற நம்பிக்கை அழியாது. வசந்த வரவேற்புக்கென தன்னை தயார் செய்யும்.

இயற்கையைக் காக்கவும், இயல்பான வாழ்வினை மீட்கவும், புத்தாண்டு புதிய உற்சாகம் சேர்க்கும்; சேர்க்க வேண்டும்!

அர்த்தமுள்ள வசந்தப் புத்தாண்டு விழாவுக்கான அக — புற சூழலை காண்பதில் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னதமான ஓர் ஆளுமை 15

15. 1 'முகமும் மனமும்
சொல்லும் செயலும்
மணியாய் இசைந்த
மகாநுபவ,
எங்கள்
மனத்துள் நெருங்கிய தலைவ,
மகிழ்வாய் இனிதே வாழி!'

இரண்டு மாதங்களுக்கு முன், எங்கள் பண்பாடு கண்ட உன்னத ஆளுமையான, துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா அவர்களுக்கு பிரியாவிடை தந்த பொழுதில் பிறந்தது இந்த வாழ்த்து.

இந்த வாரம்,

ஊனினை உருக்கி
உலகிற்கு தனியான உன்னதனே
உங்கள்

பொன்னடிகள் போற்றி ஐயா, என்று பிரியும் விடை தரும் கொடுமை நிகழும்

எங்கள் தேசத்தின் எல்லா மக்களினதும் உள்ளார்ந்த வாழ்த்துகளுக்கும், போற்றுதலுக்கும், உரியவராய் - உன்னதமாய் உணரப்பட்ட, அவர் ஆளுமையின் உயிர்க் கூறுகளின் தரிசனம். அர்த்தமுள்ள அஞ்சலியாகும்.

15. 2 உலகப் புகழ் பெற்ற ஒரு பெரும் கல்வியாளன் - மண் பொறியியல் (Soil engineering) ஆய்வில் மகத்தான கண்டுபிடிப்புகளைச் செய்த விஞ்ஞானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் 'மண்' பற்றிய ஆய்வோடு முடங்கி விடா மல் இந்த மண்ணின் மக்களை மேம்படுத்தும் சமூகப் பொறியியலாளனாக (Social engineer) வும் விளங்கிய தன்மையிலேதான், அனைத்து மக்களினதும் அன்புக் குரியவராகின்றார்.

பல்கலைக்கழகங்களைத் தந்த கோபுரங்களாகவும், அதன் உயர் அதிகாரிகளை சாதாரண மக்கள் நெருங்க முடியாத உச்சங்களாகவும் காணும் மரபு எங்கள் பண்பாட்டு புலன்களில் இயல்பாகவே மாற்றங்கள் காண்பது. இந்த மாற்றத்தின் கனியாக, அர்த்தமுள்ள வாழ்வு கண்டவர் பேராசிரியர் துரைராசா அவர்கள்.

'ஒருவரிடம் அதிகாரத்தை கொடுத்துப் பாருங்கள்; அப்பொழுதுதான் அவரின் சுயரூபம் தெரியும்' என்பார்கள்.

பேராசிரியரைப் பொறுத்தவரையில், மரபுவழியான அதிகார நிர்வாக கோட்பாடுகளெல்லாம் அர்த்தமிழந்து போக, அன்பும், பொறையும், ஆழ்ந்த உறுதியுமே அவரின் பண்புகளாக, ஒருவித அருளாட்சியாகவே அவரின் நிர்வாகப் பாங்கும் அமையும்.

எளிமையான, இனிமையான அந்தச் சிரிப்பு, மனதை அப்படியே பிரதிபலித்து நின்றது. சொல்லும் செயலும் ஒன்றாய் இசைந்தது.

நவீன வாழ்வின் மூடுதிரைகளை அறியாத — அதே வேளை எந்த ஒரு நிலையிலும் தளராத கர்மயோகியாக அவரது ஆளுமை உன்னதமானது.

மானுடத்தை மீட்க, இந்த மகாநுபவர் ஆளுமை என்றென்றும் ஆதர்சம் ஆவது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலோடு உள்ளமும் நலந்தானா? 16

16.1 உடல் நோய்க்கு மருத்துவரை நாடுவதும், மருந்து தேடி அலைவதும் அவசியமான அவசரமான நடவடிக்கைகளாக சமூக அங்கீகாரம் பெறும். அதே வேளை உளநலம் குன்றியவேளை, வைத்தியரை நாடுதல் ......?

எமது சமூகங்களில் உளநலம் தொடர்பான விழிப்புணர்வு மிகவும் குறைவானது என்று கூறும் உளவியாலாளர்கள், உளமருத்துவர்களின் கூற்று நிராகரிக்க முடியாத ஒன்றுதான்!

நோயை உணர்ந்து சிகிச்சை நாடி செல்பவரையும், அங்கொடை என்றும், மந்திகை என்றும், தெல்லிப்பளை —மானிப்பாய் என்றும் தள்ளிவைக்கும் சமூக மனப்பாங்கு இன்னமும் முழுதாய் இல்லா தொழிந்ததாகச் சொல்ல முடியாததுதான் எனினும் இவ்வாறான விமர்சனக் குரல்களையும், இதுதொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் இப்பொழுது அதிகளவில் கேட்க முடிவது நம்பிக்கைதரும் விடயமாகும்.

16.2 அதிகரிக்கும் சமூக நெருக்கிடைகளிடை, சமூக நியமங்களும் (Norms) தனியன்களின் விழுமியங்களும் (Values) முரண்பாடுகளையும் - அழுத்தங்களையும் சந்திக்கும் நிலைமைகள் இன்று அதிகமாகும்.

மரபுவழி வாழ்க்கை முறைகள், ஏன் மரபுவழி வாழ்விடங்களே சடுதியில் இழக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பதி எழு அறியா பழங்குடி வாழ்க்கை' என அன்று சிலப்பதிகாரம் கண்ட இலக்கிய வாழ்வின் இலக்கணங்களாக விளங்கிய எங்கள் கிராமங்கள் இன்று அழிதலிலும், அசைதலிலும் அவலப்படும்.

சாதாரண சமூக மாற்ற நிலைமைகளிலேயே விழுமிய முரண்பாடுகளையும், தலைமுறை இடைவெளி பிரச்சனைகளையும் எதிர்நோக்கிய எங்கள் சமூக வாழ்வு புதிய திடீர் மாறுதல்களிடை மேலும் தத்தளிப்புகளை தரும்.

இத்தகைய ஒரு நிலையில் தான், மனித உளநலம் பற்றிய இன்றைய சிறப்பான சலனக் குரல்கள் எழும்.

16.3 உளநலம் தொடர்பான எமது விழிப்புணர்வு. எங்கள் சமூகம் உறுதி தளராது மேம்பட இன்றியமையாதது.

இந்த விழிப்புணர்வுடன் நாம் ஒவ்வொருவரும் உளவள பணியாளர்களாய் ஒருவருக்கொருவர் ஆதரவாய், வாழும் பக்குவத்தைப் பெறவேண்டும். ஒருவரது நெருக்கடிகளை, பிரச்சனைகளை கேட்கும், அவரை அனுதாபத்துடன் அணுகும் மனப்பக்குவம் இங்கு வளர்க்கப்படவேண்டும் 'நலந்தானா' என்று அன்புடனும், அர்த்தத்துடனும் கேட்கும் வாழ்க்கை நலமான ஒரு சமூகச் சூழலை இங்கு தோற்றுவிக்கும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலைமயமாக்கம் 17

17.1 மேலைமயமாக்கம் என்றால் என்ன? அந்தச் சொல்லுக் குள்ளேயே பொருள் துலங்குகின்றதல்லவா — மேலைத் தேய பண்பாட்டின் மயமாதலையே இது குறித்து நிற்கின்றது.

குடியேற்ற நாட்டாதிக்கத்துள் இருந்த பல நாடுகளில் இந்த மேலை மயமாக்கலின் செல்வாக்கு இன்று பெரிதும் உணரப்படும்.

இந்த நாடுகள் தமக்கென அரச — நிர்வாகம் என சுதந்திரம் கண்ட பின்னரும் கூட, இந்த மேலை மயமாக்க அலைகளுக்குள் மூழ்குதல் தொடரும்.

**பல சந்தர்ப்பங்களில் அந்த மேலைமயமாக்கர், சுய பண்பாடுகளை இழிவானதாக கண்டு ஒதுக்குதலாக அமைவது, இன்றைய சமூக - பண்பாட்டு அவலமாக குறிப்பான கவனம் பெறும்.**

மரபுவழிச் சமூக வாழ்வின், நவீன மயமாக்கம் **(moerdnixation)** என்ற பெயரில் பெருமளவிற்கு மேலை மயமாக்கலே நிகழ்ந்து கொண்டிருக்கக் காணலாம். பல்வேறு தொடர்பியல் முறைமைகளின், வழி இவ்வாறான ஒரு மாயப் பின் தொடர்தலை மேலை நாடுகளும் வளர்த்து நிற்கும் அதுவே நவகுடியேற்ற வாதமுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17.2 நவீன மயமாக்க சிந்தனைகளை, தொழினுட்ப அறிவுகளை பொருத்தமான முறையில் எங்கள் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கென பயன் படுத்தல் எப்பொழுதும் வரவேற்கப்பட வேண்டிய சங்கதிதான். அதேவேளை, சுயபண்பாட்டின் நல்ல அம்சங்களை நிராகரிப்பதாக, அது அமைவது ஆபத்தானது.

**கூடவே மேலைச் சிந்தனையில் காணக்கூடிய நல்ல அம்சங்களை விட்டுவிட்டு, வெறும் 'பன்னாடைகளாக மேலே வடித்துவரும் போலி கூறுகளை மட்டும் கைக் கொள்ளும் 'போலச்செய்யும்' வாழ்க்கையை விடாத வரை - எங்களுக்கென இயல்பான வாழ்வும் - தனித் துவமும் ஏற்படப் போவதில்லை.** 'நீலக் கால்ச் சட்டை - சப்பாத்து - ரை - முள்ளுக் கரண்டி சாப் பாடு' என்பன நவீன மயமாக்கலுக்குள் நவீனப் படுத்த வேண்டிய விடயங்கள் நிறையஉண்டு.

அவ்வாறே

எங்கள் பண்பாட்டிலும் நிறைய நல்லவை உண்டு **'கண்மூடித் தனமான மேலைமயமாக்கலின்றும் எங்கள் கண்கள் திறக்க வேண்டும்'** என்பது இன்று தமக்கென தனித்துவ வாழ்வுகண்ட தேசங்கள் சொல்லும் பாடமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் காக்கும் அகங்கள் 18

18.1 கால மாற்றங்களிடையேயும் - கொடுமைகளிடையேயும் தம் அன்புக்குரியவர்களை இழந்துபோன குழந்தைகளை அரவணைக்கும் அமைப்புகள் இன்றைய எம் தரிசனத்துக்குரியன.

குலைந்தும் - உடைந்தும் - பிறழ்ந்தும் போகும் சமூக நெறிமுறைகளின் (Norms), அநியாயங்களின் பலிக்கடாக்களாகும் இந்த பாலர்களைக்காக்கும் நிறுவனங்களால் மனிதநாகரிகம் காக்கப்படும்.

அன்பகம் - என்றும் அணைக்கும் கரங்கள் என்றும் அறிவுச் சோலைகள் என்றும் நீளும் இந்த அமைப்புகளின் அனுபவங்கள் எங்கள் அன்பின் உயர் நிலையை தொடுவன. இந்த அமைப்புகளில் வாழும் குழந்தைகளின் தாயுமானவர்களும் தந்தையானவர்களும் நம்வணக்கத்துக்குரியவர்கள்.

18.2 மனிதம் காக்கும் இத்தகைய அகங்களில் ஒன்றான அரியாலை அமல அன்னை அன்பகத்தின் இன்றைய பெரிய தந்தையான மைக்கல்சாமி அடிகளாரின் குருத்துவ நிலைப்படுத்தலின் பொன்விழா நினைவுகளிடை அவர்களைப் போற்றும் உணர்வுகள் மேலிடும், 'Father, Father, என்று அவர் அன்புக்குள் தம் மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெழுச்சிகளைக் கரைக்கும், அமைதியாய் தங்களை வளர்க்கும் அற்புதக் காட்சிகள் அதனை ஓர் ஆலய மாக்கும்.

எல்லோரும் ஓய்வு — தளர்வு என்று ஓய்ந்து போகின்ற வயதில் புதிய இந்த பணிக்காய் தன்னை அர்ப்பணித்து அந்த குழந்தை சதீசிலிருந்து ஏனைய குழந்தைகளின் கைப்பிடிக்குள் ஓடி விளையாடி உன்னத அன்பின் வடிவமாக உயர்ந்து நிற்கும் திருத்தந்தை போல, ஏனைய சிறுவர் அறிவுச் சோலைகளிலும் அப்பாக்களாகவும் அம்மாக்களா கவும் அர்ப்பணிப்புடன் மனிதம் காக்கும் அனைவரை யும் இந்தப் பொழுதில் வாழ்த்துவோம்.

18. 3 இந்த அன்பகங்களையும் — சிறுவர் அன்பு அறிவுச் சோலைகளையும் தரிசிப்பதன் வழி எங்கள் வாழ்வை யும் அன்பின்வழி புனிதமாக்குவோம்.

18. 4 அந்த இல்லங்களின் ஆழமான தரிசனத்திலே, எங்கள் சமூக குலைவுகள் — கொடுமைகள் தொடர் பான மூலங்களையும் கண்டு மனிதத்தை — மனித நாகரீகத்தை மீட்போம்.



மரபுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பத்தில் இன்பம்...? 19

19.1 துன்பத்திலும் சிரித்திருக்கும் மனப்பக்குவம் வேண்டும் என்பார்கள். துன்பவாழ்வில் தளர்ந்து போகாமல், உறுதியுடன் வாழ, இந்த சமநிலை துணையாகும் என்பது உண்மைதான்.

ஆனால் இன்றைய எங்களின் சிந்தனைக் கருவாகும் துன்பத்தில் இன்பம்...' மனித நடத்தையின் வக்கிரமான இரண்டு செயல்பாடுகளையே கருத்தில் கொள்ளுகின்றது.

I. Sadism - பிறர் துன்பப்பட கண்டு இன்பமடைதல்

II. Masochism - பிறரால் துன்பபடுவதில் இன்பம் காணுதல்

மிக நெருக்கமான முதல் நிலைக்குழுக்களான குடும்ப உறவிலிருந்து விரியும் சமூக உறவுகள் வரை இந்த வக்கிர மனப்பாங்கு இன்று வளரக் காணலாம்.

19.2 'தனக்கு மூக்குப் போனாலும் எதிர்க்குச் சகுனப் பிழை' என எங்கள் மரபுவழி வாழ்க்கைப்பங்காக இது தொடர்ந்திருந்தாலும், நவீன வாழ்வில் போட்டி முரண்பாடுகளின் அதிகரிப்புடன் இந்தவக்கிர செயல்பாடுகளும் அதிகரித்து செல்கின்றன. தன்னால் அடையமுடியாததை பிறரும் இழப்பதில் இன்பம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத்தை தேடும் முயற்சி - போராட்டத்தில் ஈடுபடுவதிலிருந்து ஒதுங்கிகொள்ளும் செயன்முறையாக அடிமைப்பட்டு கிடப்பதில், சீரழிவில் இன்பம் காண்பது என இந்த துன்பத்தில் இன்ப வாழ்க்கை தொடரக் காணலாம்.

19.3 மனித ஆளுமை விருத்தியின், சமூக மேம்பாட்டின் அடிப்படைகளையே தகர்த்துவிடும், இந்த இரண்டு வக்கிர வாழ்முறைகளையும் கைவிடாதவரை உய்வில்லை என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமானது.

**மனித இயல்பான அன்பினை வளர்த்துக்கொள்வதன் வழியும், மனித உறுதியை மேம்படுத்துதலின் வழியும் இந்த வக்கிர வாழ்முறைகளிலின்றும் விடுதலை பெறவேண்டும். நாம் காண விரும்பும் அனைத்து விடுதலைகளுக்கும் இது பெருந்துணையாகும்.** ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி தரிசனம் 20

20.1 ''மனிதருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ ? ''

இல்லை;

''இனியொரு விதி செய்வோம்; ''
''பாருக்குள்ளே சமத்தன்மைத் தொடர்
பற்றும் சகோதரத் தன்மை
யாருக்கும் தீமை செய்யாது
புவியெங்கும் விடுதலை செய்யும்'' எனும் எங்கள் கவிஞன் பாரதியின் நினைவுகள் மீட்டப் படுகின்ற காலம் இது.

தமிழ் கண்ட மகாகவிஞனாக பாரதியைப் போற்றி மகிழுகின்றோம். அவன் கவிதைகளினால் — சிந்தனைத் திரள்களினால் நமது பண்பாடு செழுமையும் செம்மையும் கண்டது.

20.2 பாரதியின் உன்னதங்களுக் கெல்லாம் அடிப்படையானது அவனது இந்த சமூக நோக்கும் - மனிதர் பற்றிய ஆழ்ந்த தரிசனமும்தான் என்பதனை உணர்ந்து அவனது ஆழுமையின் பரிமாணங்களை மாதிரியாக கொண்டு எங்கள் சமூக வாழ்வை மேம்படுத்த அவனது இந்த நினைவு விழாப் பொழுதுகள் துணையாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வசதிக்கு தக்கதாக அவன் சிந்தனைகளை வியாக்கியானம் செய்யும் கொச்சைப் படுத்தல்கள் இன்றி** அவனது ஆளுமை முழுமையை ஆழமாக தரிசிக்க வேண்டும்.

விதியே விதியே தமிழ்ச்சாதியை
என் செயக் கருதி இருக்கிறாயடா ?

என அன்று அவன் கொண்ட அச்சம், இன்னும் தொடரும் நிலைமைகளை மதிப்பிட வேண்டும். சொல்லும் செயலும் — உண்மை வாழ்வாக,

'மனிதர் நோக மனிதர் பார்க்கும் நம் வாழ்க்கை முறைகள்' எவை எவை எனக்கண்டு அவற்றை ஒழித்திடும் உறுதியைப் பெறவேண்டும்.

**மனதில் உறுதியும், வாக்கில் இனிமையும், நினைவில் நல்லதும் கொண்டு, எங்கள் ஆளுமையையும், நம் சமூகத்து விழுமியங்களையும் உயர்வானவை யாக்கு வோம்.**

நாங்கள் காணவிரும்பும் இனிய மாற்றங்கள் எல்லாம் விரைவில் கைவசமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனம் என்ற சீரழிவு 21

21 1 உலக குடும்ப ஆண்டு காலம் இது. குடும்ப நிறுவனத்தினை மேலும் மேலும் உயிர்ப்பானதாக்கி அதன் அர்த்தங்களை முழுமையாக எல்லோருக்கும் கனியச் செய்யும் சிந்தனைகள் உலகெங்கும் ஓங்கி ஒலிக்கின்ற இந்த வேளையிலே — எங்கள் குடும்ப நிறுவனத்தின் துறையிலேயே சீர்வரிசை என்ற பெயரில் நிர்ப்பந்திக்கப்படுகின்ற சீதனம் என்ற சீரழிவு பற்றி எம் சிந்தையை செலுத்துவது பொருத்தமானது தானே!

சீதனத்தின் கொடுமைகளை இங்கே வியாக்கியானங்கள் தந்து விளங்கவேண்டியதில்லை. வீட்டுக்கு வீடு வாசல்படி என்றது போல இந்த வழக்கத்தின் கொடுமை உணரப்படும். ஒரே வீட்டிலேயே மகனுக்கு வாங்குகின்றபோது காணப் படுகின்ற உசார், மகளுக்கு கொடுக்கும் நிர்ப்பந்தத்திடை பெருமூச்சாகும். ஆனாலும் இந்த வழக்கம் மட்டும் ஓழிந்தபாடில்லை. இதனால் திருமணமே இங்கு வியாபாரப் பொருளாகும் அவலம் தொடரக் காணலாம். இந்நிலையில் எங்கள் குடும்பங்கள் தொடர்பான பிரச்சனைகள், குடும்பம் உருவாக முன்பே தொடங்கி விடுகின்றன என்பது மிகையான கூற்றல்ல.

21. 2 ஆண் ஆதிக்க சமூக அமைப்பில் பெண்களின் நிலை இவ்வாறாய் தாழ்ந்து போனமை பற்றி இன்று ஓரளவு விழிப்புணர்வு ஏற்பட்டாலும், இதனை செயல்வடிவில் நிலைநாட்டக் கூடிய வல்லமை இன்னமும் வந்து சேர்ந்திடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதனத்தை ஒழிக்கும் நீதி நிர்வாக சட்டங்கள் ஏதும் நம்மிடமில்லை. ஆனாலும் 1961 இலேயே இந்தியாவில் கொண்டு வரப்பட்ட வரதட்சனை தடுப்புச்சட்டமும், பின்னாலே அதற்குக் கொண்டு வரப்பட்ட உறுதியான திருத்தங்களும் கூட அங்கு நிலைமையை மாற்றியதாக வில்லை. ஸ்ரவ்' அடுப்பு விபத்து மரணம் என்ற பெயரில் தற்கொலைகளும் — கொலைகளும் இன்னமும் தினத் தந்திகளாய் கேட்பன.

21. 3 பெண்ணை வளர்த்துத் தருகின்ற தாய்க்கு முலைக் கூலி என்ற பெயரில் செல்லம் கொடுத்து மண வினை கண்ட ஒரு மரபின் எச்சங்கள், இன்று மாப் பிளை விலைபேசுகின்ற அவலங்கள் காணும்.

காதலர் இருவர் கருத்தொருமித்த மணவினையின் கனிகளை, அக்திணை மரபுகளை கண்ட சமூகம், இன்று பண நிலை அந்தஸ்து ஒருமித்தலுக்காக அலையும்

இந்த இழிவழக்கினை எங்கள் சமூகம் முழுமையாய் உணர்ந்து ஒழிக்காதவரை இங்கு அர்த்தமுள்ள குடும்பம் மட்டுமல்ல; வாழ்வே எவர்க்கும் இல்லை என்பது எங்களின் உலக குடும்ப ஆண்டின் உரத்த சிந்தனையாக வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மேம்பாடு 22

22.1 மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், வெறுமனே ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மட்டும் முக்கியத்துவம் தந்த கடந்தகால நடைமுறையானது இப்பொழுது மீளாய்வுக்குட்படுத்தப்படும்

பொருளாதார விருத்திக்கு மட்டும் முன்னுரிமை தந்த நிலையில், கல்வி, சுகாதாரம், சமூக வேறுபாடுகளைக் களைதல் போன்ற சமூக நலத்துறைகள் பெரிதும் பாதிப்புக்குள்ளானமையும் பின்தங்கிய கிராம வாழ்வு பெரும்பாலும் மாறாக ஏழ்மையிலே தொடர்கின்றமையும் இந்த புதிய சிந்தனையின் அடிப்படைகளாவன.

22.2 அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் கொப்பன் ஹேகனில் நிகழ உள்ள உலக சமூக மேம்பாட்டு உச்சி மாநாடு தொடர்பாக யுனெஸ்கோ தலைமை இயக்குனர் பெட்ரிகோ மேயர் முன்வைத்துள்ள கருத்துக்கள், எங்கள் சமூகங்களின் எதிர்கால மேம்பாட்டிற்கான நம்பிக்கையை ஊட்டுவன.

- ஒவ்வொரு தேசமும் கல்விக்கு முதன்மைதந்து தன் தேசத்து திறன்களை முழுமையாக வளர்க்க வேண்டும்.

- கிராமப்புறங்களிலிருந்து மக்கள் வெளியேறாத வண்ணமும், கிராம வாழ்வில் எல்லோருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா வாய்ப்புகளும் கிடைக்கத் தக்கதாகவும் கிராம மேம்பாட்டினை ஊக்குவித்தல்.

- மனித உரிமைகளை மதிக்கின்ற, பண்பாடுகளை நல்லுறவை வளர்க்கின்ற, மக்கள் தனிமைப் பட்டுப் போகாமல் சமூக வாழ்வில் பங்குபற்றுதலை உறுதி செய்தல்.

- மனித — இயற்கை சமநிலை பாதிக்கப்படுவதனை கருத்தில் கொண்டு சூழலைப் பாது காத்தல்.

- செய்தி தொடர்பு முறைகளை மேம்படுத்துவதன் மூலம் சமூக விழிப்புணர்வுகளை அதிகரித்தல்.

- நிகழும் சமூக மாற்றங்கள் தொடர்பான அவதானிப்புக்களை முழுமையாக அறிந்து அறிவிப்பதற்கான ஆய்வுகூடங்களையும், முன்னறிவுப்புச் சாதனங்களையும் நிறுவுதல்.

முன் வைக்கப்பட்ட இச் சிந்தனைகளை உலக நாடுகள் கருத்தில் கொண்டு தமது செயல்ப்பாட்டினை தீவிரப்படுத்த வேண்டும்.

22 3 எங்கள் சமூகங்களைப் பொறுத்தவரை சாதியென்றும் பகுதியென்றும், எங்களுக்குள் இன்னும் வேரறாது உள்ள விலங்குகளை விமர்சித்து, முற்றற ஒழிப்பதற்கான சிந்தனையும், இச்சமூக மேம்பாட்டு உச்சிமாநாட்டு வேளை உரத்துச் சிந்திக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழையன கழிதலும் புதியன புகுதலும் 23

23. 1 பழையன கழிதலும், புதியன புகுதலும் கால மரபாக நிகழ்கின்ற சங்கதிகள். இங்கே பழையன கழிதல் என்பது பழைமையான அனைத்தையும் களைதல் என்ற பொருளில் அமைவதில்லை. வேண்டாதன வற்றை காலத்துக் கொவ்வாதன வற்றை நீக்கி, புதிய சிந்தனைகளை பொருத்தமான முறையில் இணைத்தலையே குறித்து நிக்கின்றது

இந்த செயல்முறையின் வழியேதான் மனித சமுதாயம் வளர்ச்சிகாண முடிந்தது. பழமைக்குள் மூடிக்கொண்டு, புதியவற்றைக்காண மறுக்கும் சமூகங்கள் தேச்க நிலை கொண்டனவாகி, தேய்ந்து விடக் காண்கின்றோம்

23. 2 பாரம்பரியம், பண்பாட்டின் தனித்துவம் என்பன பேணப்படுகின்ற அதே வேளையில், புதிய மறுமலர்ச்சி வாழ்வினுக்கு குந்தகமான அம்சங்களைப் பாரம்பரியமென்ற பெயரால் கட்டிக்காக்கும் முயற்சிகளை உணர்ந்து தெளிகின்றபோதே புதிய சமுதாய வளர்ச்சிக் கனிகளை காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 . 3 தனிமனித நிலையிலும் சமூக நிலையிலும் எமது விழுமியங்களை (Values) சமூக நியமங்கள் / நெறிமுறைகள் (Norms), தொடர்பான மீள் மதிப்பீட்டினை ஒவ்வொருவரும் பிரக்ஞை பூர்வமாக சிந்திக்கவேண்டும். இத்தகைய சிந்தனைக்கு வாய்ப்பான காலமாக, புத்தாண்டுப் பிறப்பும், அது தரும் புது உணர்வும் அமைகின்றன.

புத்தாண்டினைத் தொடரும் தைப்பொங்கல் பண்டிகை — 'தைபிறந்தால் வழிபிறக்கும்' என்ற நம்பிக்கையின் தளிர்களை துளிர்க்கின்ற காலம்.

இந்த பண்டிகைக் கால புத்துணர்விடை எங்கள் பழையனவற்றின் பயனான அம்சங்களைத் தேர்ந்து, அவற்றினை புதிய சமூக சிந்தனைகளுடன் இயல்பாய் இணைத்து, புது வாழ்வு காணும் உறுதியில் நிமிர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞன் பணி 24

24·1 ஒரு பண்பாட்டின் வாழ்வும் வளமுமாய் உயிர்ப்பினைத் தருவன கலைகள். தனிமனித விருத்தியிலும், சமூக மேம்பாட்டிலும் கலைகளின் பணி மகத்தானது

தன் கால சமூக கடமைகளை உணர்ந்து கலைவழி சமூக மேம்பாட்டினை காட்டும், ஆத்மார்ந்த தலைவனாக கலைஞர்கள் விளங்கும் போதுதான் கலையின் இந்த சமூக அர்த்தம் சாத்தியமாகும். பேசமுடியாத மக்களுக்கான குரலாக கலைஞன் குரல் அமைந்து, சமூகத்து நீசத்தனங்களையெல்லாம் வெளிப்படுத்தி, உறுதியாய் குரல் தரும் போதுதான் சமூக விழிப்புணர்வும் ஏற்படுகின்றது.

'சமூக கொடுமையிடை
மனிதன் ஊமையாய்
கிடந்தழுகின்றான்
இயற்கை அவனுக்கு
கண்ணீரைத் தந்தது
எனக்கோ இறைவன்
ராகமும் சொல்லும் தந்தான்' என

தனது குரலில் துயருறும் மனிதனைப் பாட முடிகிறது என்பான் கதே (Goethe) என்ற கவிஞன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24.2 இந்த உணர்வில் கலைஞன் கலந்து - சமூகத்தின் குரலாக சமூகம் தொடர்பான தெளிந்த கருத்து நிலை கொண்டனவாக அவன் அமைவது இன்றியமையாதது

நிலவும் சமூக அமைப்பின் யதார்த்தங்களை, அதற்குள் மனிதரை மனிதன் கொடுமை செய்யும் வேறுபாடுகளை மனிதருக்குள் வேருன்றிப் போன மூட வழக்கங்களை யெல்லாம் தெளிந்தவனாக, அதே வேளை அந்த மனிதர்களை நேசித்து அவர்களுக்கு விடிவுகாட்டும் ஆத்ம பலம் கொண்டவனாக கலைஞன் அமைதல் வேண்டும்.

தன் கலைப்பயணத்தில் சுய முதன்மை, விலாசம் தேடலின்றி சமூக முதன்மைக்குள் தன்னைக் கரைத்துருகும் மெழுகுவர்த்தியாக அவன் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு கலைபடைக்கும் கலைஞனே காலத்தால் அழியாத கலைகளைத் தருவான்; அவனும் காலத்தால் அழியாது வாழ்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டுத் தேக்கம் 25

25. 1 சமூக மாற்றங்களிடை தனி மனிதரும் சமூக குழுக்களும் சந்திக்கும் பிரச்சனைகள் பல. தொழில் நுட்ப மாற்றங்கள், பிற பண்பாடுகளின் செல்வாக்குகள் என மாற்றத்தை விளைவிக்கும் காரணிகளும் பலவாகும்.

இத்தகைய மாற்றத்தின் போது ஒரு பண்பாட்டின் அனைத்துக் கூறுகளும் ஒரு சீராக மாறுவதில்லை. சில கூறுகள் வேகமாக மாற சில மந்தகதியிலேயே நகர்வன. இன்னும் சிலவோ மாறவே மாட்டோம் என ஆழ உறுதியாய் நிற்பன.

இத்தகைய ஒரு நிலையினையே **பண்பாட்டுத் தேக்கம்** அல்லது **பண்பாட்டுப் பின்னடைவு** என சமூகவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

25. 2 புதிய தொழினுட்ப மாற்றங்களிடை, பொருள் சார் பண்பாட்டு அம்சங்களை ஏற்றுக் கொள்ளுகின்ற வேகத்தில் கருத்து நிலைகளை நாம் ஏற்றுக் கொள்வதில்லை என் இக் கோட்பாட்டை முன் வைத்த ஒக்போன் (Ogburn) என்ற சமூகவியலாளர் குறிப்பிடும் கருத்து, எமது சமூக நிலைமையை விளங்க பெரிதும் துணையாகும். உதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணம் சொல்லி இதனை விளங்க வேண்டியதில்லை, எங்கள் நடைஉடை பாவனைகளில் காட்டும் நவீனத்துவ ஆர்வம், வேகம் எங்கள் சிந்தனையில், வாழ்க்கை இலக்குகளில் இருப்பதில்லை. நேற்று சுவிற்சிலாந்தில் வந்த நாகரீக உடை, இன்று எங்களை அலங்கரிக்கும் ஆனால் அதே பண்பாட்டில் அவர் ஆண் – பெண் சமத்துவம் பற்றி கண்ட அனுபவம் எங்களுக்கு அந்நியமானதாகும்.

கருவிகள் எல்லாமே நவீனமானவை. கருத்துக்கள் மட்டும் பழைமையானவை.

25.3 இந்த முரணை விளங்காதவரை, முன்னேற்றம் சாத்தியமாவதில்லை.

எங்களது சமூகம் பற்றிய சிந்தனை, அதனை ஊட்டல்ல கல்வி எல்லாமே இந்த முரண் நிலையை உணர்த்தும் விதமாய் அமைதல் இன்றியமையாதது.

இதற்கு, இந்த விழிப்புணர்வை யூட்டுகின்ற சமூக மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள், தம்மிடை இதற்கு தேச்க, முரணகள் அற்ற நிலையை எய்துதல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயனும் வழியும் 26

26.1 மனிதவாழ்வில் இன்று எண்ணிறைந்த இலக்குகள் இந்த இலக்குகளிடை தரநிலைகள் — இவற்றினை எட்டுவதற்கான வழி முறைகளும் வேறுபடுவன.

மரபுவழிச் சமூகவாழ்வில், பயன் இலக்குகளோ, அன்றி அவற்றினை எய்துதற்கான வழி முறைகளோ அதிகம் இருந்ததில்லை. இதனால் முரண் நிலைகளும் அதிகமில்லை.

26.2 நவீன வாழ்வில் இலக்குகளை அடையும் போட்டி காரணமாக எப்படியாவது பயனைக் கண்டால் சரி என்ற போக்கினால், வழிமுறை பற்றிய உணர்வு இன்று பெரிதும் அருகிப்போதல் அவதானிக்கப் படும்.

நவீன சிந்தனை — நவ இலக்குகள், தொடர்பாக — புதிய புதிய வழிமுறைகள் தேடப்படுவது இயல் பானதுதான்.

ஆனால் இந்த வழிமுறைகள், வழிப்பறிகளாகவோ வழிப்பிறள்வுகளாகவோ அமையாமல் எச்சரிக்கை யாக இருப்பதும் அவசியம்.

26.3 நடைமுறைவாழ்வில், மரபுவழி இலக்குகளை எய்துவதற்கே வழிமுறைகளில் நவீன பாணிகளை நம்மவர்கள் கையாளுகின்ற நிலைமை, சிறப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கவனத்திற்குரியதாகின்றது. உதாரணத்திற்கு தூரப்போவானேன் — திருமணம்; அதிலும் பெரியோர்பேசிச் செய்து வைக்கும் திருமணம், தாலியும் கட்டித்தான். அது சுவிஸிலும் நடக்கலாம் — கனடாவிலும் நடக்கலாம், தாலி கட்டாயம் கட்டப்படும். ஆனால் வழிமுறை; வழியில் நடப்பவைபற்றி, நாம் அலட்டிக்கொள்வதில்லை.

இன்றைய போட்டிச் சமூக வாழ்விடை, நாம் வழிபிறளும் பாதைகள் பல — இதனால் நாம் கண்ட பயன் சுகங்களும் கூட பெரும்பாலும் நிலைப்பதில்லை.

26. 4 இலக்கும், வழிமுறையும் சமூக நியமங்களினின்றும் விலகும் வேளைகளில் அல்லது இலக்கை எய்தும் வழிமுறை இயலாததாகிப் போகும்போது தனியன்கள் அனோமி (Anomie) எனப்படும் வேர் அறு நிலைக்கு தள்ளப்படுதல் பற்றி, சமூகவியல் அறிஞர் றொபேட் மேட்டன் (Robert Merton) ஆய்வுகள் தெளிவாகவே எச்சரிப்பன.

பயனும் வழியும் சீராய் அமையும்படி வாழும் வாழ்க்கையினால் தான் எமது வாழ்வையும், எங்கள் சமூக வாழ்வையும் மேம்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று புதிதாய்ப்பிறந்தோம் 27

27. 1 ''சென்றதினி மீளாது மூடரே! நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றொழிக்கும் கவலையெனும்
குழியில் வீழ்ந்து
குமையாதீர்! சென்றதனைக் குறித்தல்
வேண்டாம்
இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று
எண்ணமதைத் திண்ணமுற இசைத்து''
வாழ அழைப்பான் பாரதி,

பாரதி மட்டுமன்றி இன்றைய உளவியல், உள வளத் துணையாளரும் இந்த உள மறுமலர்ச்சியையே வேண்டி நிற்கின்றனர்.

27. 2 ஆனாலும் இந்த புதுமலர்ச்சி புதிய சிந்தனையை மறுத்து துயரக்குழியுள் மூழ்கிவிடும் மனித அவலங்களும் தொடரக் காணலாம்.

இந்த துயரங்களிலிருந்து விடுதலை தருவதற்குப் பதிலாக மேலும் துயரகடலுள் மனிதரை வீழ்த்தி விடும் போதைப் பொருட்களுக்கும், விதிசார் விளக்கங்களுக்கும் குறைவில்லை.

கூடவே உற்சாகமூட்டி புதிய உணர்வை ஊட்டுதற்குப் பதிலாக மற்றவன் துயரில் மகிழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பதும், காலப்போக்கில், தனது துயரையே தான் விளங்கமுடியாமல் போவது, தான் துயரப் படவே பிறந்தவன் எனும் போலிச் சமநிலை காண்பது என இந்த துயரக்கதைகள் தொடரும்.

27. 3 துயரம் என குந்தியிருந்து சதா அழும் தனி மனிதனோ, சமூகமோ பிழைத்ததாக வரலாறில்லை. ஏகாதிபத்திய அணுகுண்டின் அழிவிலிருந்து யப்பான் இன்று கண்ட புதுமலர்ச்சி, தன்னம்பிக்கையுடன் துயரை வென்ற சமூகமேம்பாட்டுக்கு சிறப்பான எடுத்துக்காட்டாகலாம். அழித்தவனே அசந்து போகும் நிலையில் எழுச்சியும் வளர்ச்சியும்.

27. 4 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்ற பாரதியின் அழைப்பு, கடந்த காலத்தையே மறந்த வெறும் இருப்பியல் வாத நோக்கிலான **(Existentionalist perspective)** தப்புதல் அல்ல.

வீண் கவலைகளை விட்டு விடும்; திரும்பிவராதபடி அழிந்து விடும் பண்பாடே அவன் சொல்வது. நேற்றைய அனுபவத்திலிருந்து நாளையின் புது வாழ்வு; அதற்கே இன்றைய இந்த புதிய பிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியமும் யதார்த்தமும் 28

28.1 இப்படித்தான் இருக்கவேண்டும் என ஒரு பண்பாடு எதிர்பார்க்கும் நிலையே இலட்சிய பண்பாடு அல்லது உகந்த நிலைப் பண்பாடு (Ideal culture) எனலாம். ஆயினும் யதார்த்தம் எதிர்பார்த்தபடி அமையாது போகலாம்

சமுதாயத்தின் நெறிமுறைகள் — சட்டங்கள் எல்லாம் இநத இலட்சிய நிலையை எய்தும் வழியில் துணையானபோதும் நடைமுறையில் மீறல்களும் இயல்பாய் நிகழக் காணலாம்.

'அன்பு செய்' என்பது இலட்சிய எதிர்பார்ப்பாக இருக்கையில் அடிதடி ஆக்கிரமிப்பு மூலம் அதனை காணும் நிலை யதார்த்தமாகலாம் இன்னும் பொதுவாழ்வில் லஞ்சம் வாங்குவது இழி செயல் எனப்படும். ஆனால் யதார்த்தம் லஞ்ச ஆணை யாளரே அகப்படும் நிலையாகலாம். தன்னலம் கருதாத பொது வாழ்வே சிறந்ததென பேசப் படும். நடைமுறையில் பிறரை துன்புறுத்தி தன்னலம் காத்தல் யதார்த்தமாகலாம்.

பரீட்சை அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி என்பது இலட்சிய நிலை, ஆனால் தமிழ் மாண வனுக்கு மட்டும் த ப்படுத்திய அனுமதி. இவ்வாறே தொழில் தகுதியடிப்படையில் என்பது எதிர் பார்ப்பு. நடைமுறையில் இன அடிப்படை, செல் வாக்கு எனும் தகுதிகளுக்கு முதலிடம் தரப் படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. 2 நவீன வாழ்வில் பண்பாட்டின் இலட்சிய எதிர் பார்ப்புகள் பலவும் யதார்த்த நிலையில் வேறுபடு வதனை அதிகமாகக் காணலாம். இலட்சிய எதிர் பார்ப்புகள் பெரிதும் போதனை பொன்மொழி களாகவே அமைந்துவிட நடைமுறை யதார்த் தமோ தலைகீழாகி விடுகிறது.

'உனக்கல்ல — ஊருக்கே 'உபதேசம்' என்ற நிலை மைகளும் பொது நலனை விஞ்சும் தனி நலன் / சுயநலன் உந்தல்களும் இத்தகைய இலட்சிய — யதார்த்த முரண்பாட்டின் அடிப்படை களாகலாம்.

8. 3 அவ்வாறன்றி சில சமயங்களில் மரபுவழி இலட் சிய நிலை எதிர்பார்ப்பு, புதிய சமூக மாற்றச் சூழ லுக்குப் பொருத்தமற்ற காரணத்தினாலும், யதார்த்தம் வேறுபடலாம். இத்தகு நிலைகளை கருத்தில் கொண்டு, எமது சமூக வாழ்வில் இலட்சிய — யதார்த்த பண்பாட்டு முரண் நிலைமைகளை விளங்குதலும் — உணருதலும் இன்றைய இன்றி யமையாத் தேவைகளாகும். சமூக மாற்றத் திற்கான, பண்பாட்டு மேம்பாட்டுக்கான அடிப் படைகளாக இந்த உணர்தலும் அதன்வழிச் செயற் பாடும் அமையும் எனலாம்.

மரபுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வைத் தடுக்கும் தாழ்வு மனப்பான்மை 29

29. 1 தன்னை மற்றவரிலும் தாழ்வாகக்கருதி வருந்துதலையே, தாழ்வு மனப்பான்மை என்கின்றோம். மற்றவரோடு ஒப்பிட்டு ஏங்குதலும், பெருமூச்சு விடுதலும் தாழ்வு மனப்பான்மையுடன் ஒதுங்கிப் போதலும், நம் வாழ்வைத் தடுக்கும் துயர நிலைகள்.

தாழ்வு மனப்பான்மையை ஒரு நோய் என்றே உளவியலாளர் குறிப்பிடுவதுண்டு.

29. 2 மரபுவழி — கூட்டுவாழ்வில் தாழ்வுச் சிக்கலால் தளர்பவரை ஊக்குவிக்கவும், அவரையும் இணைத்து முன்னேற்றவும் வாய்ப்புகள் உண்டு. ஆனால் போட்டியே வாழ்வின் ஆயுதமாகிவிட்ட இன்றைய நவீன வாழ்வில், தாழ்வுச் சிக்கல் மேலும் மேலும் அதிகரிக்கும் சூழலே காணப்படுகிறது.

கூடவே சமூக வேறுபாடுகள் அதிகரிக்க அதிகரிக்க, இந்தத் தாழ்வு மனப்பான்மையும் அதிகரிக்கக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29.3 வாழ்வைத் தடுக்கும் இந்தத் தாழ்வு மனப்பான்மையை அகற்றும் வழிகள் காண்பது அவசியம்.

'நம்மைப்பற்றி மற்றவர் என்ன நினைப்பார்களோ என்ற கற்பனையும், அதன் வழியான அச்சமுமே தாழ்வுச் சிக்கலின் மூலங்கள் என்பதனை முதலில் உணர்ந்திட வேண்டும். கூடவே மற்றவருடனான ஒப்பீட்டை விட்டு தன்னம்பிக்கையுடன், அறிவின் துணையுடன் வாழ்வை திட்டமிட வேண்டும்.

ஒப்பிட நேரிடும் போதும், புறவயமாக எமது பலம் பலவீனங்களை மதிப்பிடுவதற்கான ஒரு வழியாகவே அதனைக் காணும் போது, தாழ்வுக்குப் பதில் வாழ்வு கைவசமாகும்.

தனிமனித நிலையிலும், சமூக – இனக் குழுக்களிடையும் கூட, இத்தாழ்வு மனப்பான்மை நீங்காதவரை, மேம்பாடு இல்லை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளரும் பிள்ளையின் முன்மாதிரிகள் 30

30. 1 வளரும் பிள்ளைக்கு வளமான சூழலைத் தந்து முன் மாதிரிகளாதல் பெற்றோர் கடன்; அதுவே இன்று ஆசிரியர் பணியுமாகின்றது. வீட்டிலும், பள்ளிக் கூடத்திலுமே ஒரு பிள்ளையின் பெரும் பொழுது கழிகின்றது.

பள்ளிக்குப் போகாத பிள்ளைக்கோ முற்றிலும் குடும்பம் அல்லது அவன் உலவும் முழுச் சமூகமுமே முன் மாதிரிகளாகின்றன.

ஆமாம், பிள்ளைகள் வளரும்போது முன்மாதிரி களாக தம் பெற்றோரை — ஆசிரியரை – நண்பர் குழாத்தினரை வரித்துக்கொள்கின்றார்கள்.

போலச் செய்வது, பிள்ளைப்பருவத்து இயல் பானது.

30. 2 நல்லொழுக்கம் — நன் நடத்தை — சமூக உணர்வு என்றெல்லாம் வீட்டிலிருந்து பள்ளிவரை நிறைய போதனைகள் இன்று வழங்கப்படுவதுண்டு. ஆயி னும் நடைமுறை.. ?

இவற்றினைப் போதிப்பவர்கள் இந்த பண்புகள் நிறைந்தவராக அமைய வேண்டியதன் அவசியம் உணரப்படாமையும். அதனால் பிள்ளைக்கு முன்னால் முன்மாதிரிகள் — முரண்மாதிரி களாய் போவதும் நடைமுறை பிழைக்க காரணங்கள் – எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. 3 எடுத்துக்காட்டாக ஒரு காட்சி —
'பொய் சொல்லக் கூடாது பாப்பா' என பிள்ளை
சுருதிப் பெட்டியுடன் முழங்கும் வேளை ...

படலையில்
யாரோ தட்டும் சத்தம் கேட்கலாம். அவர்
அப்பாவுக்கு வேண்டாதவராகலாம்.
''அப்பா வீட்டில் இல்லையென்று சொல்''
பிள்ளை வெளியே வந்து,
''அப்பா இல்லையென்று சொல்லச் சொன்னார்''
என சொல்லுகிறான்.
உள்ளே வந்ததும் அப்பா அவனை
'மொங்கு' கிறார்.
''ஏனடா நான் சொன்னதாக சொன்னாய்'' ?
என்கிறார் –
''பொய் சொல்லக் கூடாது பாப்பா'' —
பொன்மொழி,
மெள்ள மெள்ள சுருதி கலையும்.

இவ்வாறாக,
முன்மாதிரிகள் — முரண் மாதிரிகளாக, பிள்ளை
யும் விலகி பிறழும்.
பெற்றோர் ஆசிரியர் சும்மா மாதிரிகளாயிராமல்,
முன் மாதிரிகள் ஆதல் அவசியம்.

இல்லையெனில் நல்ல மாற்றம் ஏதும்
சாத்தியமேயில்லை யெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பர் குழாம் செல்வாக்கு...

**31. 1** குழந்தை ஒன்று வளர வளர அதன் நடத்தையிலே ஒத்தவயது நண்பர் குழாமின் செல்வாக்கும் அதிகரிக்கக் காணலாம்.

நல்ல நண்பர்களின் செல்வாக்கு, நல்ல வாழ்வுக்கு வழிகாட்டுகிறது.

'நவில் தொறும் நூல் நயம் போலும்
பயில்தொறும் பண்புடையார் தொடர்பு' என்பார் வள்ளுவர்.

ஆமாம் சிறந்த நூல், படிக்கப் படிக்க இன்பம் தருவதுபோல பண்பட்டவரின் நட்பும் பழகப் பழக இன்பம் தரும்.

31. 2 மறுதலையாக, கூடா நட்பு, சாவதற்கு காரணமாகும் துயரம்வரை இட்டுச்செல்லலாம்.

இதனால்த்தான் ஆராய்ந்து ஆராய்ந்து நண்பனைத் தேர்தல் வேண்டும் என்பார் வள்ளுவர்.

நவீனவாழ்வில் 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' எனும் விதமான உறவுகளும், நெறிமுறைகளை மதியாத மனிதர்களுமாய் நீள்கையிலே —

சேராத இடங்களிலே சேர்வதும், சேர்ந்ததனால் துயரங்களில் சோர்வதும் பலரும் சந்திக்கும் யதார்த்தமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 . 3 துயரம், கூடா நட்பினால் அழிபவருக்கு மட்டுமல்ல; அவருக்கு நெருக்கமாயிருந்த பிற உறவுகளுக்கும் தான் — எடுத்துக்காட்டாக கூடா நட்பின் விளைவாக குடிப்பழக்கம் ஒருவரைச் சேர்கின்ற போது அவர் குடியே மூழ்கிவிடும் ஆபத்து நிலைமைகளைக் குறிப்பிடலாம்.

துயரே எனினும் ஒத்த வயது நண்பர் குழாம் உறவுகள் தொடருதற்கான அடிப்படைகளை விளங்கி கொள்ளாதவரை, இந்த இருவழி துயரங்களும் தொடர்கதைதான் —

31 . 4 மரபுவழி விழுமியங்களுக்குப் பதில் புதியவற்றை இலகுவாக ஏற்றுக்கொள்ளுதல், ஒப்பீட்டளவில் சமத்துவ நிலையில் உறவு கொள்ளுதல், பாலியல் போன்ற பல விடையங்கள் பற்றிய நுண்ணை சமூக மயமாக்க கருவியாக அதன் இன்றியமையாமை உணரப்படல் என நண்பர்குழாம் செல்வாக்கின் அடிப்படைகளை இன்றைய சமூகவியலாளர்கள் இனம் காண்பர்.

கூடுமானவரை இந்த அம்சங்களை முதனிலை உறவான குடும்பத்தினர் கவனித்து நடக்குமிடத்து. துயரம் அதிகமாகாமல் தடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தொடர்புச் சாதனங்களின் செல்வாக்கு 32

32. 1 குடும்பம், பள்ளிக்கூடம், நண்பர் குழாம் என நீளும் சமூகமயமாக்கற் கருவிகளிலே Mass Media எனப் படுகின்ற மக்கள் / வெகுஜன தொடர்பு சாதனங்களின் செல்வாக்கு இன்று பெரிதும் உணரப்படும்.

மாயத்திரை விரிவாய் சினிமா, தொலைக்காட்சி, நாடகம், சஞ்சிகை — நூல்களென குவியும் சாதனங்களிடை மூழ்கிப்போகும் தனியன், தனக்கான விழுமியங்களை, ஏன் மாதிரிகளை (Models) கூட இன்று பெரும்பாலும் இந்த ஊடகங்களிலிருந்தே பெறுவதைக் காணமுடிகிறது.

32. 2 இந்த ஊடகங்கள், யதார்த்த வாழ்வினோடு இசைந்தவையாய், சமூக வாழ்வின் மேம்பாட்டிற்கு உகந்தனவாய் அமையும்போது அவற்றிலே தோயும் தனியனுக்கும் உய்யும் வழி கிடைக்கும்.

அல்லாதபோது வெறும் பகற் கனவுகளும் யதார்த்தத்திற்கு ஒவ்வாத கற்பனை மிதப்புக் களுமே மிஞ்சுகின்றன.

சினிமா நாயக — நாயகி பாவங்கள், பாவனைகள் யதார்த்த வாழ்வில் எதிர்பார்க்கப்படும் போது ஏற்படும் இடறல்கள் தான் எத்தனை ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவேளை இப்போது இந்த மாயத்திரை இங்கு விலக்கப்பட்டது. எனினும் வேறு வேறு சாதனங்களிடை இத்தகு பிரதிமைகளின் தொடர்ச்சி நீளும் —

32. 3 ஒரு பிள்ளைக்கு நாம் வாசிக்கக் கொடுக்கும் கதைப் புத்தகத்திலிருந்து, நாம் தரும் காட்சிகள் வரை கவனமான தேர்வு அவசியம். பொருத்தமான, தனி மனித ஆளுமை வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டுக்கும் உகந்த தொடர்புச் சாதனங்களைக் காண்பது, இன்றைய அவசிய — அவசர தேவைகளில் முதன்மையானது எனலாம்.

தொடர்புச் சாதனங்களினால் உலகம் கிராமமாகிறது (Global village) எனப்படுகிறது. உலகமயமாக்க அலையில் சுய பண்பாடுகள் அமிழ்ந்து போவதும், எமது அடையாளங்கள் அழிந்து போவதும் உணரப்படவேண்டும். இல்லையென்றால் தோலிருக்கச் சுளை விழுங்கிய கதையாக இந்த சாதனங்கள் எங்கள் பண்பாட்டையே தின்று விடும். எங்கள் பிள்ளைகளே எங்களுக்கு அந்நியராகி விடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறக்கமும் விழிப்பும் 33

33.1 உறக்கம் — மனிதனின் அடிப்படைத் தேவைகளில் இன்றியமையாதது.

ஒரு நாட் பொழுதில் குறைந்தது இவ்வளவு நேரம் உறங்குதல் அவசியம் என உடலியல், அறிவுகளுங் கூறுகின்றன.

உறக்கமே குழந்தையின் வளர்ச்சியாகவும் கருதப்படும்.

ஆனாலும் பருவ மாற்றத்துடனும் கால மாற்றத் துடனும் விழிப்பின் அவசியத்தையும் நாம் உணர வேண்டியிருக்கின்றது.

33.2 சூழலின கொடிய விஷஜந்துகளிலிருந்து – விலங்கு களிலிருந்து தன் சுற்றத்தைக் காக்க ஆதிமனிதன் விழித்திருப்பது அவசியமானது.

பல்வேறு விதமான மனித ஆக்கிரமிப்புக்கள்; ஆபத்துக் கொடுமைகளிலிருந்து தன் சுற்றத்தை — சமூகத்தைக் காப்பதற்கான விழிப்பின் அவசியம், இன்றைய 'நாகரிக' மனிதனின் தேவையாகிறது.

33.3 விழிப்பு — தனிமனித மேம்பாட்டுக்கும், நாம் சார்ந்த சமூக மேம்பாட்டுக்கும் அருந்துணை யாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக்கெடுத்தவர்கள் நாட்டைக் கெடுத்ததுடன் தாமும் கெட்டார்'' என்ற கவிஞர் கல்யாணசுந்தரம் பாடல் அடிகளின் உயிர்பொருள் என்றென்றும் எமக்குள் கேட்டு எம்மை வழிப்படுத்தவேண்டும்,

லாங்பெலோ குறிப்பிட்டவாறு,

''பெரியோர்கள் அடைந்து அனுபவிக்கும் உயரிய ஸ்தானங்கள் திடீரென பெறப்பட்டவையல்ல; பிறர் தூங்கும் போது அவர்கள் இரவில் வேலை செய்தவராவார்'' என்ற அனுபவ மொழியின் அர்த்தங்கள் எமதுவாழ்வின் உயர்வுக்கான விழிப்புணர்வினைத் தரவேண்டும்.

33.4 'விழிப்பு' என்பது வெறுமனே கண்விழித்திருத்தல் என்பதற்கு மேலாக எமது நிலையை — இலக்குகளை உணர்ந்து — தெளிந்து செயற்படுதல் என்ற ஆழமான பொருளிலும் உணரப்படவேண்டிய ஒன்று என்பதும் இங்கு சிறப்பான கவனம் பெறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தூங்குகின்றவனைத் தட்டி எழுப்பலாம்..." 34

34.1 தூங்குபவனைத் தட்டி எழுப்பலாம்; ஆனால் தூங்குவது போல பாசாங்கு செய்பவனைத் தட்டியும் எழுப்ப முடியாது' என்பது அனுபவமொழி.

தனிமனித குடும்ப அனுபவங்களிலிருந்து — உலகுதழுவிய நாடுகளிடையிலான உறவுவரை இந்த அனுபவம் இன்றுவரை அடிக்கடி உணரப் படும்.

பல்வேறு சமூக — அறிவியல்களின் வளர்ச்சியின் பின்னாலும், மனித உறக்கமும் பாசாங்கு உறக்கமும் கலைவதாயில்லை.

34.2 முன்னைய காலத்து உறக்கம், பெரும்பாலும் அறியாமையின் வசப்பட்டதாயிருந்தது அறிவின் வழி விழிப்பினை ஏற்படுத்தும் வாய்ப்பு இருந்தது. ஆனால் இன்று அறிவறிந்தவரிடத்தும் உறக்கம் கலையா நிலைமைகளைக் காணமுடிகிறது,

இந்நிலையில் சமூக விழிப்புணர்வு பணியில் ஈடுபடுபவர் பணி மிக மிகக் கடினமாகின்றது.

34.3 தனிமனித முரண்பாடுகளுக்கான காரணங்கள் தெரிந்த பின்னரும் முரண்பாடுகளை வளர்க்கும் நிலைமைகள் நீளுகின்றன. சமூக — தேச உறவுகளில் மனித உரிமைகள். என்றும் — சமூக நீதி —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை மகத்துவம் என்றும் உலக அரங்கில் பிரகடனங்கள் — ஒப்பந்தங்கள் சாசனங்கள் என எழுதிய நாடுகளே வசதிக்கு ஏற்றபடி விழிப்புக் காட்டுவதும், பாசாங்கு உறக்கம் கொள்ளுவது மான நிலைமைகள் மாறாதவரை இந்த உலகில் மனிதகுலம் மேம்பட வாய்ப்பில்லை என்பது மிகையான கூற்றல்ல.

34. 4 தூங்குபவர்களைத் தட்டி எழுப்பும் சமூக விழிப் பூட்டும் பணியில் உள்ளவர்களின் முதற் பணி, இந்த பாசாங்கு உறக்கக்காரர்களை இனங்கண்டு கொள் வதும், அவர்தம் போலி நிலைமைகளை உணர்த்து தற்கான வழிகளைக் காண்பதுதான்.

இந்த வழிவகைகளைக் காண்பதற்கான அறிவு மட்டுமல்ல, துணிவுகூட இன்றைய சமூகப்பணி யாளர்களுக்கு அவசியமாகின்றது.

அறிவுத் துணிவு கொண்டவர்கள் ஓர் அணியாக இணைவதும், செயற்படுவதும் இன்றியமையாதது.

'பொழுது புலர்ந்தது நாம் செய்த தவத்தால்
புன்மை யிருட் கணம் போயின யாவும்
எழு பசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி' என்ற

பாரதியின் திருப்பள்ளிஎழுச்சி இந்த மண்ணிலும் வசமாகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல கோபம் 35

35.1 'சினமடையாதே சீறி விழாதே' என்று பகுதாரி ராகத்திலே ஒரு கீர்த்தனையை கேட்டிருப்பீர்கள் — ஆமாம் – ஒருவரின் சிறந்த குணங்களை கோபம் சிதறடித்துவிடும் என்று பாடும் அந்தப் பாடல்.

' தன்னைத்தான் காக்கில் சினம் காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்' என்று வள்ளுவப் பெருந்தகையாரின் வழியிலேயே அந்த 'சின மடையாதே' என்ற அறிவுரைப்பாடலும் அமையும்.

35. 2 அப்படியானால் சினம் — கோபம், கூடாத ஒரு குணம் தானே, பின் எப்படி 'நல்ல கோபம்' என்று தலைப்பிட்டிருக்கிறீர்கள் என நீங்கள் கேட்பதை உணரமுடிகிறது

'கோபம் என்பது ஓர் உயிரிக்கு வாய்ந்த தற் காப்புச் சக்தி — அது இயல்பானது' என்பது இன்றைய உளவியல் அறிவு தரும் செய்தி

இதனை தன் காப்புக்காக மட்டுமன்றி, சமூக காப்புக்காகவும் ஒருவர் பயன்படுத்தும் வேளையில் தான் அது 'நல்ல கோப' மாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம்! — சமூக நீதிக்காக — அநியாயங்களைக் கண்டு ஒருவர் கொள்ளும் கோபம் இருக்கிறதே! — அதன் வழிதானே சமூகப் புரட்சியும் — நீதியும் பிறக்கின்றன.

35. 3 சரி, கூடாத கோபம் என்பது பற்றி குறிப்பிடவே இல்லை என்கிறீர்களா? பிறர் மீது எடுத்ததற்கெல்லாம் கொள்ளும் அர்த்தமற்ற வெறுப்புணர்ச்சியான கோபம், வள்ளுவர் பெருமான் சொன்னது போல தனக்கே கேடுதரும் என்பது உண்மைதான்

தேவையற்ற கோபத்தினால் இன்ன இன்ன நோய்கள் வரும் என்று இன்றைய மருத்துவ விஞ்ஞானம் பெரிய பட்டியலையே போடும். ஆனால் நாம் குறிப்பிட்டபடி நீதிக்கான கோபம், பல சமூக நோய்களையே நீக்கும் — அந்த நல்ல கோபம் நல்லவர் கோபமே ஒரு சமூக மாற்றத்தின் அடிப்படை எனலாம் —

உங்கள் கோபம் இனி எந்த வகை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவப் படிப்பு 36

36. 1 படிப்பு அவசியமானது, மனித குல வளர்ச்சியில் அதன் பங்கு மிக மிக இன்றியமையாதது

ஆனால் நவீனமயமாக்கம் என்ற பெயரால் படிப்பு என்றதும் வெறுமனே புத்தகப் படிப்பை, பரீட்சை முடிவுகளைக் கருதும் இன்றைய மனப்பாங்கு தவறானது – ஏன் ஆபத்தானதும் கூட.

36. 2 ஓடக்காரனுடன் புத்தகப் படிப்பின் மகத்துவம் பேசியவரின் கதையைக் கேள்விப்பட்டிருப்பீர்கள் — பாயும் ஆற்றைக்கடக்க ஓடம் ஒன்றில் ஏறிய புத்தகப் படிப்பாளி ஒருவர், ஓடக்காரனுடன் பேச்சுக் கொடுத்தாராம்.

''நீ சேக்ஸ்பியரை படித்திருக்கிறாயா?''

பதில் மௌனம்.

''அப்போ வாழ்வில் $\frac{1}{4}$ பங்கை இழந்துவிட்டாய்''

''தொல்காப்பியம், நன்னூல் படித்தாயா ?''

மௌனம்

''அப்போ வாழ்வில் $\frac{1}{2}$ பங்கை இழந்துவிட்டாய்''

''கம்பனை இளங்கோவை படித்தாயா ?''

மௌனம்

''அப்போ வாழ்வில் $\frac{3}{4}$ பங்கை இழந்துவிட்டாய்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளை ஓடத்தில் ஏற்பட்ட ஓட்டை ஒன்றினால், நீர் உள்ளே புக, ஓடம் மூழ்கும் ஆபத்து நேர்ந்ததாம் —

''பெரியவரே, நீந்த கற்றிருக்கிறீர்களா?'' என்று தன் மௌனம் கலைய கேட்டானாம் ஓடக்காரன்.

மௌனமாய் கைவிரித்தாராம் பெரியவர் —

''அப்போ உங்கள் முழு வாழ்வையே இழக்கப் போகிறீர்கள்'' என்று கூறி, ஆற்றிலே குதித்து நீந்தி தன் அனுபவப்படிப்பின் வலிமையைக் காட்டினான் அந்த ஓடக்காரன், என்பது அந்தக் கதை.

36. 3 இந்தக் கதை சொல்லும் அனுபவப் படிப்பின் இன்றியமையாமை உணர்ந்து, இன்றைய எங்கள் கல்வி முறையில் அனுபவ கூறுகளுக்கு உரிய இடம் தருதல் அவசியமானது. கூடவே அனுபவ ஞானத்தை மதிக்கும் மனப்பாங்கை வளர்ப்பதும் மிக மிக அவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்த்தமிழந்த குறியீடுகள் 37

37. 1 மனித நாகரிக வளர்ச்சியிலே மொழிவழியாகவும், பல்வேறு குறியீடுகளின் வழியாகவும் மனித இனம் கண்ட வேறுபாடுகள் பல.

இத்தகைய குறியீடுகளாக இயற்கையில் தான் கண்ட, நயந்த பலவற்றையே மனிதன் பயன் படுத்திக்கொண்டான். இந்த குறியீடுகள் பலவற் றையும் தனது பண்பாட்டின் சின்னம், நாகரிகத் தின் வெளிப்பாடு என பெருமையும் கொண்டான்.

காலப் போக்கில் பெரும்பாலான சொற்களும் — குறியீடுகளும் அர்த்தமிழந்து போக வெறும் கருத் தளவிலான 'பெருமை' மட்டும் மிஞ்சுதல் இன் றைய யதார்த்தமாகும்.

வெறும் குறியீடுகள் — சொற்கள் மட்டுமன்றி மனிதன் உருவாக்கிய நிறுவனங்கள் பலவும் கூட இதன்வழி அர்த்தமிழந்துபோவது இன்றைய எமது அனுபவ தரிசனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. 2 யந்திரப் பாங்காக இந்த குறியீடுகளைப் பயன் படுத்துதல் ஒருபுறம்; தந்திரப்பாங்காக பயன்படுத் துதல் மறுபுறமாக இந்த அர்த்தமிழத்தல் அதி கரிக்கும்.

உதாரணம் தேடி அதிகம் சிந்திக்கவேண்டிய தில்லை.

சமாதானம் - சமாதான வெண்புறா என்ற குறி யீடுகளின் அர்த்தங்கள் எங்கள் தேசத்தில் எப்படி உணரப்படுகிறது — உணர்த்தப்படுகின்றது; இந்த வாரத்தில் நாகர்கோயிலில் வெள்ளைச் சீருடைகள் இரத்தத்தில் தோய விமானகுண்டு கொடுமையில் தொலைந்த அந்த பள்ளிச் சிறார்களின் அழிப்பு — சமாதான வெண்புறாவின் வாழ்வுக்காக என விளக்கப்படுமா? அர்த்தம் தொலைந்த குறி யீடுகள்! மனிதர்கள்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர் அவலம் 38

38. 1 இடம்பெயர் அவலம், இன்று முதன்மையான தொரு சமூகப் பிரச்சனையாகும். ஓர் இரவுக்குள் பல்லாயிரக் கணக்கில் தம் பாரம்பரிய இருப்பிடங்களை விட்டு மக்கள் இடம்பெயரும் நிர்ப்பந்தம், 'இனித் தாங்க முடியாது' எனும் விதமாய் அதிகரித்துள்ளது.

'பதியெழு அறியாப் பழங்குடி வாழ்க்கை, பரதேசிகளாய் போச்சு போச்சு' என்றவாறு, சொந்த நாட்டிலேயே ஏதிலிகளாகும் பல்லாயிரக்கணக்கான மக்களின் துயரம் — சொல்லில் அடங்காதது.

கடந்த காலத்து இடம் பெயர்ந்தோர் முகாம்களின் நலன்களை கவனிப்பதிலேயே 'மட்டுப்பாடு'களை எதிர்கொண்ட வேளையில், அண்மைய கொடுமைகளால் இடம் பெயர்ந்தோர் நிலை மேலும் மோசமாகும்.

இதுவரை கால 'பொருளாதார தடை' உச்சமென அடிப்படை உணவுப் பொருட்களின் கையிருப்பும் அருந்தலாகிய செய்தி. இன்னும் இவர் அவலத்தை அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. 2 இடம் பெயர் வாழ்வில், வெறும் சோறும், பாணும் மட்டுமா பிரச்சனைகள் — அடிப்படை மருத்துவ வசதிகளிலிருந்து குழந்தைகள் கல்வி, முதியோர் பராமரிப்பு, குடும்ப வாழ்வு என எல்லாமே கேள்வியாகும் —

'நாகரிகத்தின் பெயரால்', 'சமாதானத்தின் பெயரால்' என்று இந்த துயர வாழ்வினை நியாயப்படுத்தும் பொய்மைகள் ஐ. நா. உள்ளிட்ட உலக அரங்கில் முன்வைக்கப்படுவது இனியும் இவை தொடரும் அவலத்தின் குறிகாட்டியாகும்.

38. 3 'பதியெழு அறியாப் பழங்குடி வாழ்க்கை' என அன்று சிலப்பதிகாரம் சொன்ன இயல் நிலை வாழ்வின் மீட்சி எமது விழிப்புணர்வின் வழியது. மனிதாபிமானமற்ற, கொடிய ஆக்கிரமிப்புக் கெதிரான மக்கள் எழுச்சியே, சமாதானமான, இயல்வாழ்வை மீட்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சக்தி 39

39. 1 சந்திரனைத் தொட்டதின்று மனித சக்தி
சரித்திரத்தை மீறியது மனித சக்தி
இந்திரன் தான் விண்னாட்டு அரசனென்ற
இலக்கணத்தை மாற்றியது மனித சக்தி

என மனித சக்தியின் மாண்பினைப் பாடுவார், கவிஞர் பட்டுக்கோட்டை கலயாண சுந்தரம்.

மனித வரலாற்றில் ஒவ்வொரு காலடியிலும், மனித சக்தியின் மகத்துவமே வெளிப்பட்டது. சந்திரனில் கால்வைத்த ஆம்ஸ்ரோங், 'எனது ஒரு காலடி, மனுக்குலத்தின் பெரும் பாய்ச்சல்' என இதனையே சுட்டி நின்றான்.

39. 2 அறிவின் துணையோடு மனித சாதனைகள் உச்சங்களை எட்டும் அதே வேளையில், அறிவே அழிவின் துணையாகும் அவலமும் விதியாகும்.

அணுவைத் துளைத்த அறிவுப் பெருமிதம், அணு குண்டின் வரவுடன் தலை குனியும்.

சந்திரனைத் தொட்ட விந்தை உணர்வுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த மண்ணின் இருப்பையே கேள்விக்குறியாக்கும் ஆக்கிரமிப்பு போர்களால் அர்த்தமிழக்கும்.

தன் ஆற்றலில் விளைந்த சாதனங்களாலேயே தனது வாழ்வு முடிவை காணும் மனித அவலங்கள் தொடரும்.

39. 3 இன்றைய அவல வாழ்விலிருந்து மீளுதற்கான வழியும் மனித சக்தியிலேதான் தங்கியுள்ளது. தன் ஆக்கசக்தி, அழிவுச் சக்தியாகும் நிலை தொடர்பான விழிப்புணர்வு முதல் தேவையாகின்றது.

வெறும் தனிமனித விழிப்பு என்பதற்கு மேலாக, ஒன்றிணைந்த சமூக விழிப்புணர்வாக இது மலர்வதும் இன்றியமையாதது.

அசுரத்தனமாக எழுந்துள்ள அழிவுச்சக்திகளை எதிர்க்க, இந்த மக்கள் சக்தியே உரிய ஆயுதமாகும். மக்கள் சக்தி என்ற மகோன்னத வல்லமைக்கு முன்னால் அனைத்துத் தீமைகளும் பொடிப் பொடியாகும். தீமைக் கெதிரான 'சூரன் போரில்' மக்கள் சக்தியே வெற்றியைக் காணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பங்கேற்பு 

40. 1 மனித விருத்தியில் மக்கள் பங்கேற்பு (**Peoples Participation**) என்பது இன்றியமையாததோர் அம்சமாகும். தன்னம்பிக்கை, ஊக்கம், ஆக்கத் திறன், பொறுப்புணர்ச்சி, கூட்டுறவு என்பன மேம் பட்ட பங்கேற்றல் அடிப்படையாகின்றது.

முன்னைய கூட்டுவாழ்வில் இயல்பாகவே இவை எமக்கு வாய்த்திருந்தன. ஆனாலும் அங்கும் கூட மரபுவழி சமூக அடுக்கமைவு ரீதியான பங்குகள் தான் ஒருவருக்கு கிடைத்துள்ளன.

நவீன வாழ்வில் பங்கேற்பு என்பதனை புதிய பாடமாகவே பயில வேண்டிய நிலை. ஆமாம், இன்றைய மேம்பாட்டு செயற்பாடுகளில் மக்கள் பங்கேற்பு என்பது மிக முக்கிய இடத்தினை பெறு கின்றது.

40. 2 — அடையும் இலக்குகளை தீர்மானித்தல்
— எய்தும் வழிமுறைகளை வகுத்தல்
— செயற்பாடுகளை முன்னெடுத்தல்
— செயலின் பயன்களைக் காணல் எனும்
அனைத்துச் செயற்பாடுகளிலும் கூட்டான மக் களின் பங்கேற்பு இன்று பெரிதும் வலியுறுத்தப் படும்.

எங்கிருந்தோ இறக்குமதி செய்யப்பட்ட திட்டங் களை நடைமுறைப்படுத்தும், அல்லது நடப்பதை பார்த்துக்கொண்டிருக்கும் அல்லது நடக்காது போனாலும் வாளாதிருக்கும் இன்றைய நிலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், மக்கள் பங்கேற்பு நடைமுறையின் வழி மாற்றம் காணும். மக்கள் சக்தி (Peoples Power) யின் வல்லமையை உணரவும், உணர்த்தவும் இது வழிவகுக்கும்.

40.3 மக்களை ஒன்று திரட்டுதல் (Social Mobilization) கிராமிய பங்கேற்பு மதிப்பீடு (Partcipatory Rural Appraisal - P R A) போன்ற எண்ணக்கருக்களும், அவைசார் நடைமுறைகளும் பயனான பல கனி களை இன்று மனுக்குலத்திற்கு தந்துள்ளன. குறிப் பாக பல்வேறு சமூக அநீதிகளாலும் பாதிக்கப்பட்ட மக்களே, தங்கள் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்யவும், ஒன்றுபட்டு அணிதிரண்டு தம் இலக் கினை நோக்கி செயற்படவும் போராடவும் இந்த முறையியல்கள் கை கொடுக்கின்றன.

கற்றவர்கள், சமூக நலன் மீது பற்றுக் கொண்ட வர்கள் மக்களின் இந்த பங்கேற்பு நடவடிக்கை களுக்கான ஊக்குவிப்பாளர்களாக, அவர்களோடு இணைந்திருக்கலாம்; சட்டாம்பிள்ளைகளாக அல்ல; அவர்கள் அனுபவங்கள் தரும் பாடங்களை யும் இணைத்து அவர்களில் ஒருவராக.

40.4 உண்மையில் இந்த எண்ணக்கருக்களும், நடை முறைகளும் இன்று புதியனவாய் எம்மால் உணரப் பட்டபோதும், மனித வரலாற்றின் ஒவ்வொரு வெற்றிப் படிகளிலும் எழுதப்பட்ட உண்மைகளே என்பதனையும் இங்கு மனதிற் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



NG.

நாகலிங்கம்
நூலாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org